CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

V

காடகம்

ஸ்ரீ. அ. சுப்பராமன்
"மஹரிஷி கார்டன்"
நெ. 18A/9, ஐந்தாவது கிராஸ் தெரு,
சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர்,
சென்னை - 600004

2004

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காடகம்

KATAKAPRASHNA

உரையாசிரியர்

ப்ரம்மஸ்ரீ N. V. நடராஜ தீக்ஷிதர்

நங்கவரம் S. O.

திருச்சி.

ஸ்ரீ அ. சுப்பராமன்

"மஹரிஷி கார்டன்"

நெ. 18A/9, ஐந்தாவது கிராஸ் தெரு,

சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர்,

சென்னை — 600 004.

2004

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆருவது வெளியீடு : ஏப்ரல், 2004

பிரதிகள் : 100

(இலவச வெளியீடு)

அச்சிட்டோர் : ப்ரபு ப்ரிண்ட்ஸ்

தொலைபேசி : 044-25544755 (PP)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அட்டவணை

	பக்கம்
முகவுரை	v
முதல் பிரச்னம்	1
அனுவாகம்—1	1
அனுவாகம்—2	7
அனுவாகம்—3, 4	8
அனுவாகம்—5	9
அனுவாகம்—6, 7, 8	10
அனுவாகம்—9	13
அனுவாகம்—10	15
அனுவாகம்—11	16
இரண்டாவது ப்ரச்னம்	19
அனுவாகம்—1	19
அனுவாகம்—2	21
அனுவாகம்—3	22
அனுவாகம்—4, 5	23
அனுவாகம்—6	25
அனுவாகம்—7	26
அனுவாகம்—8	28
அனுவாகம்—9	36
அனுவாகம்—10	37
மூன்றாவது ப்ரச்னம்	38
அனுவாகம்—1	38
அனுவாகம்—2	39
அனுவாகம்—3	40
அனுவாகம்—4, 5	41
அனுவாகம்—6	46
அனுவாகம்—7	48
அனுவாகம்—8	49
அனுவாகம்—9	50

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகவுரை

वेदोऽखिलो धर्ममूलम्

மனிதன் குறிப்பாக அந்தணர் தன்னுடைய நன்னடத்தை (ஆசாரம்) மற்றும் ஆசார ப்ரஸித்த மான நற்கர்மாக்கள் இவைகளைச் சரியாகச் செய்வது தர்மம் எனப்படும். இவைகளை சரியாகச் செய்வதற்கு உதவியாக இருப்பது வேதமே யாகும்.

ऋग्भिर्वह्निशिखा कलापविसरत्व्यक्ताभिरैन्द्रीं दिशं प्रोद्यत्वायु समीरितेन यजुषायो दीपयन्दक्षिणाम् । साम्ना चन्द्र मरोचि गौ निकर प्रद्योतितनापरां कौबेरीं च विभाति तैः समुदितैः तस्मै नमः शम्भवे ॥

(மேற்படி ச்லோகம் கம்போடிய நாட்டு ஒரு கல்வெட்டில் காணப்பட்டது.) அக்னி ஜ்வாலை கள் போன்று பரவும் ரிக்வேதம் கிழக்கு நோக்கிய முகத்திலிருந்தும், அதிவேகமுள்ள வாயு போன்ற யஜுர்வேதம் தெற்கு முகத்திலிருந்தும், சந்தர னின் ஒளி போன்று குளிர்ச்சியையும், மகிழ்ச் சியையும், தரக்கூடிய ஸாமவேதம் மேற்கு முகத் தில் இருந்தும், அதர்வணம் முதலிய வேதங்கள் வடக்கு முகத்திலிருந்தும் மங்களத்தைத் தரவல்ல ஈச்வரனுக்கு நமஸ்காரம்.

வேதத்தை எப்பொழுதும் சொல்வதும் அதில் கூறப்பட்டுள்ள யக்ஞம் முதலியவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களைச் செவ்வனே செய்வதும் ப்ராம்மணனுக்கு தர்மமாகும்.

ப்ராம்மணன் த்விஜன் (இருமுறை பிறப்புள்ளவன்) எனக் கூறப்படுகிருன். ஸ்முருதிகளில் மூன்ருவது பிறவியும் கூறப்படுகிறது.

मातुरग्रे अधिजननं द्वितीयं मौञ्जिबन्धने ।
तृतीयं यज्ञदीक्षायां द्विजाय श्रुतिचोदनात् ॥
(मनुस्मृति)

ப்ராம்மணனுக்கு தாயின் வயிற்றில் பிறப்பது முதல் பிறவியாகும். உபநயனம் செய்யப்படுவதால், வேதத்தை அத்யயனம் செய்யப்படுவது, அதில் கூறப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதற்கு தகுதியுள்ளவனுக ஆவதால் இரண்டாவது பிறவியும், வேதத்தில் கூறப்பட்டுள்ள யக்ஞங்களை செய்ய ஆரம்பிப்பதால் மூன்ருவது பிறவியும் ஏற்படுகிறது என்பது ஸ்ம்ருதி வசனம்.

महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ।

ஸோம யாகம் முதலிய பெரிய யக்ஞங்களைச் செய்வதனுலும், பாக யக்ஞங்கள், பஞ்சமஹா யக்ஞங்கள் எனக் கூறப்படும் சிறு யக்ஞங்களையும் செய்வதனுல் சரீரமானது ப்ராம்மணத் தன்மையை அடைகிறது.

இவ்விதமான யக்ஞங்களை எப்பொழுது ஆரம்பிப்பது, உரியகாலம் எது—

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अत्र अग्न्याधेय कालः । यथा श्रद्धं अत ऊर्ध्वं जीवति पितरि अग्नीनादधीत । (इति बोधायनः) जायापवाप्य दशमे अहनीति शालीकिः (बोधायन गृह्य-सूत्रं १-१०-५) विवाहात् परमाध्याय जुह्वदेव अग्नि होत्रकम् । स्मृति चन्द्रिका)

என்று ஸ்ம்ருதி கர்த்தாக்கள் சொல்லியுள்ளார்கள். ப்ராம்மணன் விவாஹமானவுடன் 10 நாட்களுக்குள் தன்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் பொழுதே அக்னி ஹோத்ரம் செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்று போதாயனர் சொல்லுகிறார். ஆதலால் விவாஹம் ஆனவுடனேயே யக்ஞங்கள் முதலியவைகளை அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

यस्य वेदश्च वेदिश्च विच्छिद्येते त्रिपूरुषम् । स वै दुर्ब्राह्मणो नाम ।

எவரால் மூன்று தலைமுறைகளுக்கு வேதாத்யயனமும், யக்ஞங்களும் செய்யப்படாமல் துண்டிக்கப்படுகிறதோ, அவர் துர் ப்ராம்மணர் என்று கூறப்படுகிறார்.

இவ்விதமான ப்ராம்மணருக்கு கடமையாகச் சொல்லப்பட்ட யக்ஞங்கள் 21 யக்ஞ ஸம்ஸ்தைகள் எனக் கூறப்படுகின்றன. இவை 3 வகை—7 பாக யக்ஞ ஸம்ஸ்தைகள், 7 ஹவிர் யக்ஞ ஸம்ஸ்தைகள், 7 ஸோம ஸம்ஸ்தைகள் எனப்படுபவை,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யக்ஞங்களின் பேதமாக இஷ்டிகள், ஸத்ரங்கள், சயனங்கள் போன்றவையும் கூறப்படுகின்றன.

இஷ்டிகள்-நியதமாக அனுஷ்டிக்கப்படுபவை, காம்யேஷ்டிகள் என இருவகைப்படும். யாகங்களின் அங்கமாக அனுஷ்டிக்கப்படும் இஷ்டிகள் தீக்ஷிணியேஷ்டி முதலியவை. ஸத்ரங்கள்—அநேக நாட்கள், மாதங்கள் அல்லது வருஷங்கள் தொடர்ந்து செய்யப்படும் யாக வகைகள்.

சயனம் என்பது இருவகை — *1*. மஹாக்னி சயனம் *2*. க்ஷுத்ர (சின்னது) சயனம்.

யக்ஞங்களில் ஆஹவனீயாக்னியை உத்தர வேதி என்னும் இடத்தில் வைத்து ஹோமம் செய்வது பசுபந்தம் ஸோம யாகங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. இஷ்டகை என்ற ஸம்ஸ்கிருத பதத்திற்கு செங்கற்கள் என்று பொருள், வேதத்திலும், ச்ரௌத ஸூத்ரத்திலும் கூறிய முறைப்படி செங்கற்களை (இஷ்டகைகளை) தயாரித்து வேதி தயாரிக்கப்படுகிறது. இம்மாதிரி செங்கற்களை அடுக்குவதற்கு சயனம் என்று பெயர். மந்தரபூர்வமாக அக்னி வைக்கும் இந்த வேதியை தயாரிப்பதால் அந்த வேதியையே அக்னிஸ்வரூபமாக் வேதத்தில் கூறப்படுகிறது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட வேதிகள் பல வகைப்படும். கருடபக்ஷிபோல் தயாரிப்பது கருட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சயனம் என்று பெயர். இங்கு கொடுக்கப்பட்ட சயனம் ஸாவித்ர சயனம் எனப்படும்.

மஹாக்னி சயனத்தின் முறை விரிவாக 4வது, 5வது காண்டங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

க்ஷுத்ர (சின்னது) சயனம் — ஸாவித்ர சயனம், நாசிகேத சயனம், சாதுர் ஹோத்ரிய சயனம், உபானு வாக்ய சயனம், வைச்வஸ்ருஜ சயனம், ஆருண கேதுக சயனம் போன்றவை. க்ஷுத்ர சயனங்களை अङ्गुलि परु-கட்டை விரலின் பர்வா (ரேகை அளவு) शर्करा சிறு கடினமான கற்கள், சுக்கான் கற்கள், स्वयमातृण्णाः தானுகவே ஏற்பட்ட த்வாரத்துடன் கூடிய சிறுகற்கள் சுக்கான் கல், लोकंपृणाः நிரப்புவதற்கான மண், மணல் இவைகளால் செய்யப்பட்டது.

ஸாவித்ரம் முதலிய சயனங்கள் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் ஸாவித்ர, நாசிகேத, சாதுர்மாஸ்ய, உபானுவாக்ய, வைச்வஸ்ருஜ சயனங்கள் என்ற வகையிலும், போதாயன ஸூத்ரத்தில் ஸாவித்ர, நாசிகேத, ப்ரம்மசித் ஸமஸ்த சயனங்கள் என்ற வகையிலும் சொல்லப்படுகின்றன.

सावित्रं स्वर्गकामश्चिन्वीत - पशुबन्धेचीयते । काटकाः सवित्र नाचिकेत, चतुर्होत्र वैश्वसृजाः । तथा-रुणकेतुः पञ्चमः काटकः । देवाचार्येण अग्निहोत्र, दर्शपूर्णमास पशुबन्ध चातुर्मास्यादिषु चेतव्याः ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்றபடி இந்த சயனங்கள் அக்னிஹோத்ரம் தர்ச பூர்ணமாஸ இஷ்டி, பசுபந்தம், சாதுர் மாஸ்யம் இவைகளுடன் செய்யலாம் என்று விதிக்கப்பட்டுள்ளது.

ஸத்யாஷாட ஸூத்ரம் 11, 12 ப்ரச்னங் களிலும், வைகானஸ ச்ரௌத ஸூத்ரம் 11வது ப்ரச்னத்திலும் சயனங்கள் பல சொல்லப்படு கின்றன.

இவ்விதமாக அனுஷ்டிக்கப்படும் பலவித யக்ஞங்களின் பலன்கள் உலகத்தின் க்ஷேமத்திற் காகவே எனக்கூறப்படுகிறது.

सौम्या खलु वा आहुतिर्दिवो वृष्टिच्यावयति कृषिर्वृष्टिर्यजमानाय कल्पताम् ॥

யக்ஞங்களில் விதிப்படி செய்யப்படும் ஆஹுதிகள் (நெய் சமித் அன்னம் முதலியவை) தேவர்கள் வசிக்கும் ஆகாயத்தை அடைந்து மழையைப் பொழியச் செய்கின்றன. யாகம் செய்யும் யஜமானனுக்குப் பயனாக மழையும், நீர்வளம் ஏற்படுவதால் விளை நிலங்கள், தான் யங்கள் இவைகளின் விருத்தி ஏற்படட்டும் என்று வேதம் கூறுகிறது.

அக்னியில் முறைப்படி செய்யப்பட்ட ஹோமம் சூரியனை அடைந்து, சூரியனால் மழை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகப் பெய்யும்படி செய்யட்டு, மழையினால் ஓஷதிகளும், சாப்பிடும் பொருள்களும் உண்டு பண்ணப்படுகிறது. ஓஷதிகளாலும், சாப்பிடும் பொருள்களாலும் மனிதன் உண்டாகிறான்.

भूमिं पर्जन्या जिन्वन्ति दिवं जिन्वन्त्यग्नय इति

என்கிறது வேதம். ஆகாயத்தை (யக்ஞ) அக்னிகள் புஷ்டி அடையச் செய்கின்றன. அதே மாதிரி போஷிக்கப்படுவதால் ஆகாயமானது பூமியை மழையினால் புஷ்டியடையச் செய்கின்றது, இவ்விதமாக யக்ஞங்களினால் பூமி செழிப்படைந்து, ஓஷதிவர்க்கங்கள், தான்யங்கள், இவைகளின் மகத்தான அபிவிருத்தி ஏற்பட்டு பூமியிலுள்ள மனித வர்க்கமும், ப்ராணி வர்க்கங்களும் விருத்தியடைகின்றன. காடகத்தில் முதல் ப்ரச்னத்தில் கூறப்படுவது ஸாவித்ர சயனம். ஸாவித்ர சயனம் என்பது ஸவித்ரு தேவதையை (சூரியனை) ப்ரதானமாகக் கொண்டது இரவு, பகல் முதலிய காலங்கள் சூரியனுடைய கதிபேதங்களால் ஏற்படுபவை.

முகூர்த்தம் (48 நிமிஷம்) என்ற பகல் இரவுகளின் ஒரு சிறு பாகம் முதற்கொண்டு ஸம்வத்ஸரம் வரயிலான தீர்க்க கால அளவு வரை சூரியனுடைய சஞ்சாரத்தினால் ஏற்படக்கூடிய கால அளவுகள். அவைகளைக் குறிக்கும் கற்களை தயார் செய்து, ச்ரௌத ஸூத்திரத்தில் சொல்லிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விதிப்படி ஒன்றினுள் ஒன்ருக வட்ட வடிவு அமைப்பில் 9 வடிவங்கள் அமைத்து, அதன் நடுவில் நாபி எனப்படும் பாகத்தை அமைக்க வேண்டும். இந்த நாபியில் ஆஹவனீயாக்னியை வைத்து பசுபந்தம் முதலியன செய்யலாம். இரவு பகலான காலங்களுக்கு காரணபூதரான சூரியனின் மண்டலம் போல் இந்த இஷ்டை களால் வேதி தயாராகின்றது. எந்தந்த வட்டத் தில் எவ்வெவக் காலத்தைக் குறிக்கக் கூடிய இஷ்டகைகள் வைக்க வேண்டும் என்று ச்ரௌத ஸூத்ரத்தில் கூறியபடி வைக்க வேண்டும்.

எல்லா இஷ்டகைகளும் காலங்களின் பெயர் களாக அமைந்திருப்பதால் இது காலசக்ரமாகவே விளங்குகிறது. இது படத்தின் மூலம் விளக்கப் படுகிறது.

வேதத்தின் உட்பொருளே உணர்ந்து வேதா ப்யாஸம் செய்வதின் அவச்யத்தை விளக்கும் பரத்வாஜ உபாக்யானம், அதிதி ஸத்காரத்தின் அவச்யத்தையும், பெருமையையும், ஆத்ம ஞானத் தின் பெருமையையும் விளக்கும் நாசிகேதருடைய உபாக்யானமும கூறப்படுகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ச்ரௌத ஸூத்ரத்தில் விளக்கப்பட்டபடி வரையப்பட்டிருக்கிறது.



1. महान्
2. कः (ब्रह्मा)
3. प्रजापतिः
4. संवत्सरः
5. नाभिः

முதல் ரேகை 15 பூர்வபக்ஷ பகல்கள் ◊, பூர்வபக்ஷ பகல் முகூர்த்தங்கள் O.
இரண்டாவது ரேகை 15 பூர்வபக்ஷ ராத்ரிகள் ◊, பூர்வபக்ஷ ராத்ரி முகூர்த்தங்கள் O.
மூன்றாவது ரேகை 15 கிருஷ்ணபக்ஷ பகல்கள் ◊ க்ருஷ்ணபக்ஷ பகல் முகூர்த்தங்கள் O.
நான்காவது ரேகை 15 கிருஷ்ணபக்ஷ ராத்ரிகள் ◊, க்ருஷ்ணபக்ஷ ராத்ரி முகூர்த்தங்கள் O.
ஐந்தாவது ரேகை 12 ஸம்வத்ஸரத்தின் 12 சுக்லபக்ஷங்கள் ◊.
ஆறாவது ரேகை 12 ஸம்வத்ஸரத்தின் 12 க்ருஷ்ணபக்ஷங்கள் ◊.
ஏழாவது ரேகை 13 மாதங்கள் (அதிமாஸமுள்ள வருஷம்) 13 மாதங்கள் X.
எட்டாவது ரேகை 15 க்ஷாத்ர முகூர்த்தங்கள் எனப்படும் 15 முகூர்த்தங்கள் O.
ஒன்பதாவது ரேகை 9
(கிழக்கு ஆரம்பித்து ஆறு க்ரதுக்கள், □+ மூன்று ருதுக்கள் O)
மத்தியில் நாபியில் 4 இஷ்டகைகள், ப்ரஜாபதி, ஸம்வத்ஸரம், மஹான், கஃ (ப்ரம்மா)
வெளியே 4 திக்குகளில் ஸ்வயம் மாத்ருண்ணா :

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy
Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

श्रीः

काठके प्रथमः प्रश्नः

वेदो नित्यमधीयीतां तदुदितं कर्मस्वनुष्ठीयताम्

सावित्रं जुहोति प्रसूत्यै

காடகம்

முதல் ப்ரச்னம்

॥ सावित्र चयनम् ॥

ஸாவித்ர சயனம்]

அனுவாகம்—1

संज्ञानं विज्ञानं प्रज्ञानं जानदभि जानत् ।

கட்டைவிரல் பர்வா அளவுள்ள 185 ஹிரண்ய இஷ்டகைகள் எனப்படும் சுக்கான் கற்கள். இவைகள் இஷ்டகைகள் எனக் கூறப்படுகின்றன. தவிர நான்கு இஷ்டகைகள் தானுகவே ஏற்பட்ட துவாரத்துடன் கூடிய சுக்கான் கற்கள் வேதியில் உத்தரவேதி எனப்படும் ஆஹவனீயாக்னி வைக்கக் கூடிய இடத்தில் ஒரு சிறு முளை அடித்து அதில் தர்ப்பத்தைக் கொண்டு வட்ட வடிவமுள்ள 9 கோடுகள் வரையப்படுகின்றன. இந்த 9 கோடு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களில் வெளிப்புறம் உள்ள முதல் கோட்டில் மேல் ஸம்ஞானம், விஞ்ஞானம் ப்ரஞானம், ஜானத், அபிஜானத், ஸங்கல்பமானம், ப்ரகல்பமானம், உப கல்பமானம், உபக்லுப்தம், க்லுப்தம், ச்ரேய: வஸ்ய:, ஆயத், ஸம்பூதம், பூதம் என்ற பெய ருள்ள சுக்லபக்ஷ ப்ரதமை முதல் பௌர்ணமி வரையிலான 15 திதிகளின் பகலைக் குறிக்கும். 15 இஷ்டகைகளைத் தனித்தனியாக மந்திரத் துடன் வைக்கப்படுகின்றன, உபதானம் என்று சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு இஷ்டகையையும் வைக்கும்போது (உபதானம் செய்யும் பொழுது) சுக்லபக்ஷத்தின் முதல் நாள் பகல் ரூபமான ஸம்ஞானம் என்ற இஷ்டகையே, நீ அங்கிரஸ் என்னும் தேவதை யுடன் ஒன்று சேர்ந்து இங்கு ப்ரதிஷ்டையாகி இரு. இம்மாதிரியே ஒவ்வொரு இஷ்டகையையும் வைக்கவேண்டும்.

வெளியிலிருந்து உட்புறம் முதலாவது கோட்டின் இடைவெளிகளில் சுக்லபக்ஷ திதியின் பகல்களின் 15 முகூர்த்தங்களைக் குறிக்கும் (முகூர்த்தம் என்பது 2 நாழிகை அல்லது 48 நிமிடங்கள்) பெயருள்ள சித்ர;, கேது;, ப்ரபான், ஆபான், ஸம்பான், ஜ்யோதிஷ்மான், தேஜஸ்வான், ஆதபன், தபன், அபிதபன், ரோசன;, ரோசமான:, சோப்ன:, சோபமான: கல்யாண: என்ற 15 இஷ்ட கைகள் மந்த்ரத்துடன் வைக்கப்படுகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அடுத்த உள்புறம் 2வது வட்டக் கோட்டில் சுக்ல பக்ஷத்தில் 15 இரவுகளைக் குறிக்கும்-தர்சா, த்ருஷ்டா, தர்சதா, விச்வரூபா, சுதர்சனா, ஆப்யாயமாநு, ப்யாயமாநு, ஆப்யாயா, ஸூந்ருதா, இரா, ஆபூர்யமாநு பூர்யமாநு, பூரயந்தீ, பூர்ணு, பௌர்ணமாஸீ என்ற பெயருள்ள 15 இடஷ்கைகள் மந்த்ரத்துடன் வைக்கப்படுகின்றன. வெளியிலிருந்து உள்புறம் இரண்டாவது கோட்டில் இடைவெளிகளில் சுக்லபக்ஷ இரவுகளின் 15 முகூர்த்தங்களின் பெயருள்ள 15 இஷ்டகைகள் மந்த்ரத்துடன் வைக்கப்படுகின்றன. அவை - தாதா, ப்ரதாதா, ஆனந்த:, மோத:, ப்ரமோத:, ஆவேசயன், நிவேசயன், ஸம்வேசன:, ஸம்சாந்த:, சாந்த:, ஆபவன், ப்ரபவன், ஸம்பவன் ஸம்பூத:, பூத:,

இதன்பின்பு வெளியிலிருந்து உட்புறம் (மூன்ருவது) வளை கோட்டில் க்ருஷ்ணபக்ஷத்தின் (தேய்பிறை) 15 தினங்களின் பகல்களின் பெயர்கள் உள்ள 15 இஷ்டகைகள் மந்திரத்துடன் வைக்கப்படுகின்றன. அவையாவன –ப்ரஸ்துதம், விஷ்டுதம், ஸம்ஸ்துதம், கல்யாணம், விச்வரூபம், சுக்ரம், அம்ருதம், தேஜஸ்வி, தேஜ: ஸமித்தம், அருணம், பாநுமான், மரீசிமான், அபிதபத் தபஸ்வத்.

அதன்பின் அதே ரேகையில் இடைவெளிகளில் க்ருஷ்ணபக்ஷத்தின் பகல்களின் 15

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முஹூர்த்தங்களைக் குறிக்கும், 15 இஷ்டகைகள் மந்த்ரத்துடன் வைக்கப்படுகின்றன. இவை முறையே - ஸவிதா, ப்ரஸவிதா, தீப்த:, தீபயன், தீப்யமான:, ஜ்வலன், ஜ்வலிதா, தபன், விதபன், ஸந்தபன், ரோசன:, ரோசமான: சும்பூ:, சும்பமான:, வாம:,

அடுத்த நான்காவது வளைகோட்டில் கிருஷ்ண பக்ஷத்தின் 15 இரவுகளின் பெயர்களைக் குறிக்கும் 15 இஷ்டகைகள் மந்த்ரத்துடன் உபதானம் செய்யப்படுகின்றன. அவை - ஸுதா, ஸுன்வதீ, ப்ரஸுதா, ஸூயமாநா, அபிஷூயமானா பீதீ, ப்ரபா, ஸம்பா, த்ருப்பதி, தர்ப்பயந்தீ காந்தா, காம்யா, காமஜாதா, ஆயுஷ்மதீ, காமதுகா என்பவை.

அந்த இஷ்டகைகளின் இடையில் க்ருஷ்ண பக்ஷத்தின் இரவுகளின் 15 முகூர்த்தங்களின் பெயர்களை உடைய 15 இஷ்டகைகள் மந்த்ரத்துடன் வைக்கப்படுகின்றன. அவை-அபிசாஸ்தா, அநுமந்தா, ஆனந்த:, மோத:, ப்ரமோத: ஆஸாதயன், நிஷாதயன், ஸம்ஸாதன: ஸம்ஸன்ன:, ஸன்ன:, ஆபூ:, விபூ:, ப்ரபூ:, சம்பூ:, புவ: என்பன.

அதன்பின் வெளியிலிருந்து ஐந்தாவது ரேகையில் முறையே வருஷத்தின் 12 சுக்ல பக்ஷங்களின் பெயர்களை உடைய இஷ்டகைகள் வைக்கப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படுகின்றன. அவையாவன - பவித்ரம், பவயிஷ்யன் பூத:, மேத்ய:, யச: யசஸ்வான் ஆயு:, அம்ருத:, ஜீவ: ஜீவிஷ்யன், ஸ்வர்க்க:, லோக:,

பின்பு ஆருவது ரேகையில் வருஷத்தின் 12 கிருஷ்ணபக்ஷங்களின் பெயர்களை உடைய 12 இஷ்டகைகள் வைக்கப்படுகின்றன. அவை:- ஸஹஸ்வான். ஸஹியான், ஓஜஸ்வான், ஸஹமான;, ஜயன், அபிஜயன், ஸுத்ரவின:, த்ரவிணோதா:, ஆர்த்ரபவித்ர:, ஹரிகேச:, மோத:, ப்ரமோத:

அதன்பின் ஏழாவது வளைகோட்டில் ஒரு வருஷத்தின் 13 மாதங்களின் பெயருடைய இஷ்டகைகள் வைக்கப்படுகின்றன. இங்கு 13 மாதங்கள் என்பது அதி மாசம் 1, மற்ற மாதங்கள் 12 ஆக 13 மாதங்கள். யுகம் என்று கூறப்படும் 5 வருஷ ஸமூஹத்திற்கு இரண்டு மாதங்கள் அதிமாதங்கள் என்பது ஜ்யோதிஷ சாஸ்திரம். மாதங்கள் 13 ஏற்படுமே தவிர 14 மாதங்கள் ஒருபோதும் ஏற்படாது என்பது ஸ்ம்ருதி. அவை - அருண:, அருணாஜா:, புண்டரீக:, விச்வஜித், அபிஜித், ஆர்த்ர:, பின்வமான:, அன்னவான் ரஸவான்:, இராவான், ஸர்வௌஷத்ய:, ஸம்பர:, மஹஸ்வான்.

இதன் பின்பு மணல்கள் பரப்பப்படுகின்றன, இவை 8 வித பெயர்களுடன் கூடியதாகக் கூறப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படுகிறது. அவை ஏஜத்கா:, ஜோவத்கா:, க்ஷுல்லகா:, சிபிவிஷ்டகா:, ஸ்ரிஸ்ரரா:, ஸுசேவ:, அஜிராஸ:, கமிஷ்ணவ:, இதன் பின்பு எட்டாது வளைகோட்டில் 15 க்ஷுத்ர முகூர்த்தங்களின் பெயர்களைக் குறிக்கும் இஷ்டகைகள் (இரண்டாவது ரேகையில்) வைக்கப்படுகின்றன. இதாநீம், ததாநீம், ஏதர்ஹி, க்ஷிப்ரம், அஜிரம், ஆசு:, நிமேஷ:, பண:, த்ரவன், அதித்ரவன், த்ரவம், த்வரமாண:, ஆசு:, ஆசியான், ஜவ: என்பவை.

அதன்பின்பு ஒன்பதாவது ரேகையில் 6 யாகங்களினுடையவும், 3 ருதுக்களினுடையவும் பெயரையுடைய இஷ்டகைகள் வைக்கப்படுகின்றன.

1 அக்நிஷ்டோம:, உக்த்ய:, அதிராத்ர:, த்விராத்ர:, த்ரிராத்ர:, சதுராத்ர:, அக்நி என்ற ருதுவிசேஷம், சூரியன் என்ற ருதுவிசேஷம், சந்த்ரன் என்ற ருதுவிசேஷம் ஆக 9.

அதன்பின்பு வட்டங்களின் நடு மையத்தில் (நாபி) நான்கு ஸம்வத்ஸரங்களைக் குறிக்கும் பெயருள்ள இஷ்டகைகள் வைக்கப்படுகிறது.

1. ப்ரஜாபதி:, 2 ஸம்வத்ஸர:, 3 மஹான், 4. க: (க: என்பது ப்ரம்மாவைக் குறிக்கும்) அடுத்த 2வது அநுவாகத்தில் ஸ்வயமாத்ருண்ணைகள் எனக் கூறப்படும் 4 இஷ்டகைகள் உபதானம் செய்யப்படுகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—2

भूरग्निं च पृथिवीं च माञ्च ।

ரேகைகளின் வெளியே நான்கு திக்குகளிலும் தானாகவே உண்டான த்வாரத்துடன் கூடிய நான்கு இஷ்டகைகள் கீழ்க்கண்ட மந்த்ரங்களுடன் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளில் வைக்கப்படுகின்றன.

ஹே ஸ்வயமாத்ருண்ணே உன்னை ப்ரஜாபதி கிழக்கில் வைக்கட்டும். நீ பூ: என்ற முதல் வ்யாஹ்ருதியுடன் அக்னி ப்ருதிவி மூன்று லோகங்கள், ஸம்வத்ஸரங்கள் இவற்றின் தேவதைகளையும் யஜமானனையும் வைக்கட்டும். கீழ்திசையில் எப்படி முன்பு அங்கிரஸ் என்ற ரிஷிகளால் வைக்கப்பட்ட நீ ஸ்திரமாக இருந்தாயோ, அது போல் ப்ரஜாபதியால் வைக்கப்பட்ட நீ உறுதியாக இருப்பாயாக.

இம்மாதிரியே புவ: என்ற வ்யாஹ்ருதி தெற்கில் வாயு, அந்தரிக்ஷம் முதலிய தேவதைகளுடனும், ஸ்வ: என்ற வ்யாஹ்ருதி, மேற்கில் ஆதித்யன், தேவலோகம் ஆகிய தேவதைகளுடனும், வடக்கில் பூர்ப்புவஸ்ஸுவ: என்ற வ்யாஹ்ருதி சந்திரன், திக்குகள் இவைகளின் தேவதைகளுடன் பிரஜாபதி தேவதையிடம் கூடி இரு, என்று உபதானம், செய்யப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—3

त्वमेवत्वां वेत्थ योऽसि सोऽसि ।

இந்த அநுவாக மந்திரங்களால் அத்வர்யு சிதிக்கு உபஸ்தானம் செய்கிறார்.

ஹே சிதி வடிவில் உள்ள அக்னியே, உன் உண்மையான ரூபத்தை நீயே அறிவாய். உன்னுடைய உண்மையான ரூபம் எங்களால் அறிய முடியாதது. உன் ஜ்யோதியையும் எங்களால் அறியமுடியாது. உன்னுடைய ஜ்யோதியால் என் விரோதிகளை தஹிக்கச் செய். என்னை ப்ரகாச மானவனாகச் செய் என்று ப்ரார்த்திக்கிறார்.

ஹே அக்னியே, எங்களுக்கு ச்ரேயஸ்ஸைக் கொடு. சயனத்தில் குறைகள் நீக்கி முழுமை யடையச் செய். சந்திரன், நக்ஷத்ரம், சூரியன் இவற்றை விட ப்ரகாசமாக இருக்கிறாய்.

அனுவாகம்—4

संवत्सरोऽसि परिवत्सरोऽसि ।

இந்த அநுவாக மந்திரங்களால் யஜமானன் சிதிக்கு உபஸ்தானம் செய்கிறார்.

ஸம்வத்ஸரம், பரிவத்ஸரம், இதாவத்ஸரம், இதுவத்ஸரம், இத்வத்ஸரம் இந்த ஐந்து வருஷங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களின் பெயர்கன் (ஐந்து வருஷங்கள் கொண்ட யுகம் என்ற ஒரு ஸமூஹத்தின் பெயர்) இம்மாதிரி ப்ரபவ முதலிய 60 வருஷங்களும் 12 யுகங்களாக ஏற்பட்டுள்ளன. ப்ரபவ ஹூ-ஸம்வத்ஸரம், விபவ ஹூ-பரிவத்ஸரம், அக்ஷய ஹூ-வத்ஸரம் - இம் மாதிரி 60 வருஷங்களின் பெயர்கள் கணக்கிடப் படுகிறது வஸந்த ருது உன் சிரஸாகவும், ஹேமந்த ருது உடலாகவும், வர்ஷ ருது வால்புற மாகவும், க்ரீஷ்ம ருதுவும் சரத் ருதுவும் இறக்கை களாகவும் இருக்கின்றன.

ஸம்வத்ஸரம் உடலாகவும் இருக்கிறது. சுக்ல பக்ஷங்கள் சயனத்தில் உபயோகப்படும் கிருஷ்ண பக்ஷங்கள் அவைகளை நிரப்பும் மண்கள் இரவு பகல்கள் இஷ்டகைகள்.

அனுவாகம்—5

भूर्भुवः स्वः ।

(இது அக்னியின் மேற்கே உட்கார்ந்து கொண்டு ஹோதா சொல்லவேண்டும் இந்த உலகம், மறு உலகம் இவைகளில் அடைய வேண்டிய பலம், கீர்த்தி, தேஜஸ் முதலியவைகள் உன்னிடம் உள்ளன. அப்படிப்பட்ட அக்னியே, சௌக்யம், தன ஸம்ருத்தி இவைகளை அளிப்பாயாக,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—6

राज्ञी विराज्ञी ।

शतरुद्रीयमन्त्रसाध्य

ஹோமத்தின் ஆஜ்யத்தினுல் யஜமானன் முகத்தை துடைத்துக் கொள்ள வேண்டும். ராஞ்ஞீ (ப்ரகாசிப்பவர்) முதலிய தேவதைகளும், அக்நீ, இந்திரன், ப்ருஹஸ்பதி, விச்வே தேவர்கள் இவர்கள் என்னை யசஸ் உள்ளவனுக அக்கட்டும்.

அனுவாகம்—7

असवे स्वाहा वसवे स्वाहा

இந்த அனுவாகத்தில் அஸவேஸ்வாஹா என்று ஆரம்பித்து அர்ஜுநாயஸ்வாஹா வரை 21 ஆஹுதிகள் சொல்லப்படுகின்றன.

அனுவாகம்—8

विपश्चिते पवमानाय गायत ।

இந்த அனுவாகத்தில் ம்ருத்யுதேவனை உத்தேசித்த க்ரஹம் கூறப்படுகிறது.

ஹே ரித்விக்குகளே, ம்ருத்யுவைக் குறித்து ஸ்தோத்ரம் செய்யுங்கள். ம்ருத்யு தேவனுல் மிகுந்த மழையும், அதனுல் அன்ன ஸம்ருத்தியும் உண்டாகிறது. ம்ருத்யுதேவனுக்கு அழிவு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்பது இல்லை. எப்படி ஸர்ப்பமானது தன்னுடைய ஙலிந்த சட்டையைக் கழற்றி தான் உயிருடன் சஞ்சரிக்கிறதோ அம்மாதிரி ம்ருத்யு அழிவில்லாமல் எங்கும் சஞ்சரிக்கிருர். ஹே பசுரஸமே (க்ஷீரமே) ம்ருத்யுவிற்காக உன்னை இப்பாத்திரத்தில் க்ரஹிக்கிறேன்.

ये ते सहस्र मयुतं पाशाः ।

அபம்ருத்யுமபக்ஷுதம் என்ற மந்திரத்தினல் ஹோமம் செய்யப்படுகிறது. ஹே அக்நியே, மரணம், பசி, எதிரிகளால் செய்யப்படும் இடையூறுகள் இவற்றை நிவர்த்தி செய். அளவற்ற ஐச்வர்ய லாபத்தைக் கொடு. ஹே ம்ருத்யு தேவதையே, மனிதர்களை அழிக்கக் கூடியதான உன்னுடைய எண்ணற்ற ஆயுதங்களை (பாசங்கள்) இந்த யக்ஞத்தினல் பயனற்றதாகச் செய்வோமாக.

ம்ருத்யுதேவனுல் முதலில் சாப்பிடப்பட்டதும், அம்ருதத்திற்கு ஒப்பானதும், தேனினும் சுவையானதுமான ஹே க்ரஹமே, உன்னை சாப்பிடுகிறேன்.

எங்களுடைய வார்த்தைகளில் அக்னியும், எங்களுடைய ப்ராணனில் காற்றும், கண்களில் ஸூரியனும், மனத்தில் சந்திரனும், காதுகளில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எட்டு திசைகளும், ரேதஸில் வருணனும்' உடலில் பூமியும், ரோமங்களில் ஔஷதிகள், விருக்ஷங்கள் இவைகளும், பலத்தில் இந்திரனும், சிரஸில் மழைக்கு அதிதேவதையும், கோபதாபங் களில் ருத்ரனும், உலக வ்யாப்தியான தேவதை கள் இந்திரியங்களுடன் கூடிய எங்களுடைய சரீரத்திலும் உள்ளன. இவை அனைத்தும் ஸத்யம், ஞானம் என்ற தத்துவங்களடங்கிய ப்ரம்மத்தை அடைந்தவை.

ம்ருத்யு பயத்தினால் விலகும், என்னுடைய ஜீவன், ஆயுள், பிராணன், மனோதிடம், இவை கள் என்னை திரும்ப அடையட்டும். என் சரீரத்தில் வைச்வாநரன் என்னும் அக்நி வ்யாபித்துக் கொண்டு என்னை ரக்ஷிக்கட்டும்.

அநுவாகம்—9

प्रजापतिर्देवानसृजत ।

இந்த அனுவாகத்தில் தியானிக்கும்படி ஸாவித்ராக்னி வித்யை சொல்லப்படுகிறது.

ப்ரஜாபதி, தேவர்களைச் சிருஷ்டிக்கும் பொழுது அவர்கள் தோஷமுள்ளவர்களாக இருந் தார்கள். அவர்களை ப்ரஜாபதியானவர் தோஷங் களிலிருந்து விடுவித்தார். அதனால் வித்யுத் என்ற பெயரை அடைந்தார். அந்த தோஷங்களை அழித்தார். அதனால் வ்ருஷ்டி எனப் பெயர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெற்றார். ஆகையினால் யக்ஞங்களில் செய்பவரின் தோஷங்களைப் போக்குவதற்காக இந்த இரு மந்திரங்கள் உபயோகிக்கப்படுகிறது.

ஆபஸ்தம்ப மதப்படி இந்த மந்திரங்களை எல்லா யக்ஞங்களில் சொல்லவேண்டும்.

யக்ஞத்தின் ஆரம்பத்தில்

"विद्युदसि विद्य मे पाप्मानमृतात् सत्यमुपैमि"

என்று சொல்லி ஜலத்தை தொடவேண்டும். அவ்வாறு யக்ஞத்தின் கடைசியில்

"वृष्टिरसि वृश्च मे पाप्मानमृतात् सत्यमुपागाम्"

என்று சொல்லி ஜலத்தை தொடவேண்டும்.

(ब्रह्मयज्ञத்திலும் யக்ஞமாக இருப்பதால் இந்த இரண்டு யஜுர்மந்திரங்களும் வருகின்றன.)

அருணன் என்பவரின் புத்ரரான தோஷங்களற்றவரான அம்ஹ என்ற முனிவர் தன்னுடைய சிஷ்யனை ப்லக்ஷர் என்ற முனிவரிடம் சில கேள்விகளைக் கேட்டுப் பதில் தெரிந்து வரும்படி அவற்றின் விளக்கத்தையும் கூறி அனுப்பினார். சிஷ்யன் ப்லக்ஷரை அடைந்து ஸாவித்ராக்னி யக்ஞ என்ற மந்த்ரங்களை அறிவீரா என கேட்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவிர் அறிவேன் என்றார். அது எங்கு உள்ளது என வினவ ப்லக்ஷர் உலகபந்தங்களிற்கு அப்பாற் பட்ட உயர்ந்த வஸ்துவில் உள்ளது, அது எங்குள்ளது என வினவ ஸத்யத்தில் என, ஸத்யம் தபஸிலும், தபஸ் பலத்திலும், பலம் ப்ராணனிலும் உள்ளது என கேள்விகளுக்குப் பதில் சொன்னார். (ப்ராணன் எந்த தேவதையில் உள்ளது என சிஷ்யன் கேட்க) ப்ராணனை விட உயர்ந்த தேவதை இல்லை. ஸாவித்ர தேவதையை விட மற்றவை உயர்ந்தவை அல்ல. இதை எவன் அறிகிறானோ, அவனை ச்ரேயஸ், தவம், பலம், ப்ராணன் இவை ஆச்ரிதமாக அடைகின்றன.

ஆரம்பத்தில் இஷ்டகைகள் வைப்பதற்காகக் கூறப்பட்ட ஸம்ஞானம் முதலிய சுக்லபக்ஷங்கள், அவற்றின் முகூர்த்தங்கள், சுக்லபக்ஷ இரவுகள், அவைகளின் முகூர்த்தங்கள், க்ருஷ்ணபக்ஷ பகல்கள் இவற்றின் முகூர்த்தங்கள், க்ருஷ்ண பக்ஷ இரவுகள், இவற்றின் முகூர்த்தங்கள் மாதங்கள், ருதுக்கள், க்ரதுகள் இவை அனைத்தும் ஸாவித்ராக்நி ஸ்வரூபமே. விதேஹ தேசாதி பதியான ஜனகருக்கு தேவதைகள் இதை உபதேசித்தார்கள். மேற் சொன்ன காலங்களின் தேவதைகளை ஸாவித்ராக்னியாக உபாஸித்தால் பாபம் நீங்கி ஸ்வர்கத்தை அடைகிறான். இவருக்கு உணவு பஞ்சம் இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஹீனன் என்ற ரிஷியும் ஸாவித்ராக்நியை அறிந்து சூர்யலோகத்தை அடைந்தார். தேவ பாகர் என்ற ரிஷி சாவித்ராக்நியை நன்றாக அறிந்தார். அவருக்கு ஸாவித்ராக்னி ப்ரத்யக்ஷ மாக (எதிரில் தோன்ற) அவர் தன்னுடைய வஸ்திரத்தையே உபவீதமாக அணிந்து கொண்டு நமஸ்கரிக்க, உன்னால் இந்த உலகமே ஜயிக்கப்பட்டது என்று ஆசீர்வதித்து, இதன் ஸ்வரூபத்தை அறிபவன் இந்த உலகத்தையே ஜயிக்கிறான்.

க்ருணி: ஸூர்ய:, ஆதித்ய: இந்த எட்டு அக்ஷரங்களை முன்பும், பின்பும் ஸ்ரீபீஜத்துடன் உபாஸிப்பவன் எல்லா ஐச்வர்யங்களையும் அடை கிறான். அழிவற்றதும் எல்லா தேவதைகளையும் உள்ளடங்கியதுமான இந்த மந்திரங்களை அறிந்தவன் எல்லாம் அறிந்தவனாகிறான். உருண்டையான இத்தேவதை உருவம் மழை களுக்கு காரணமாக ஆகிறது.

அனுவாகம்—10

इयंवावसरघा ।

இந்த ஸாவித்ராக்னியானது பெண் தேனீக் களும், ஆண் தேனீக்களும் கூடிய தேன்கூடு போன்று அக்னியை உபாஸிப்பவர்களுக்கு யக்ஞங்கள், க்ரஹஸ்தன் செய்ய வேண்டிய கர்மாக்கள். இவைகளின் ப்ரயோஜனத்தை தேன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போ்ன்று தருகின்றன. ஸம்ஞானம் முதலிய சுக்ல க்ருஷ்ணபக்ஷ பகல் இரவுகளின் ரூபமான இஷ்டகைகளை உபாஸிக்கிறுனே அவருக்கு வியாதி முதலிய துக்கங்கள் ஏற்படுவதில்லை.

எம்மாதிரி வழிப்போக்கன் ப்ராம்மணர் மிகுந்த க்ராமங்களில் இவர்கள் வேதம் அறிந்த வர்கள் (அதிதி ஸத்காரம் வேதமார்க்கங்களில் க்ரஹஸ்த தர்மத்தில் கட்டாயம் அநுஷ்டிக்கப்பட வேண்டிய கார்யம்). இவர்கள் உறவினர்கள் என்று உரிமையுடன் ஆகாராதிகள் சாப்பிடுகிறுர் களோ அம்மாதிரியே தேவலோகத்தில் தேவதை களுடன் போக்யங்களைப் பெறும் நிலைமையை அடைகிறுர்கள்.

ஸாவித்ராக்நியின் ஸ்வரூபத்தை அறியாத வன் யக்ஞங்கள் செய்வதால் ஏற்படும் ஐச்வர்யம் போன்ற பலன்களை அடைகிறுர்கள். இந்த வித்யையை அறியாத பண்டிதர்கள் சாறு எடுக்கப் பட்ட கரும்பு போன்று தேவதைகளால் உட் கொள்ளப்பட்டு மிகுந்த சக்கை போன்ற கர்ம பலத்தை அடைகிறுர்கள்.

அநுவாகம்—11

कश्चिद्ध वा अस्माल्लोकात्प्रेत्य ।

சரீரம் இந்த்ரியங்கள் இவைகளைத் தவிர்த்து தன்னுடைய அந்தராத்மாவை அறிந்தவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விவேகமுள்ளவன் என்றும், தன்னுடைய அந்த ராத்மாவை உணராதவன் விவேகமற்றவன் என்றும் இருவகை மனிதர்கள் உள்ளனர்.

இந்த ஸாவித்ர அக்னி வித்யை உபாஸிக்கத் தகுந்தது என அதன் பெருமை உபாக்யானம் மூலம் விளக்கப்படுகிறது. பரத்வாஜர் என்ற முனிவர் இந்திரனிடம் 3 முறை வரம் பெற்று 3 புருஷாயுஸ்கள் (ஒரு புருஷனுடைய ஜீவித காலம் நூறு ஆண்டுகள் என்று வேதங்களில் கூறப் பட்டு உள்ளது) அதாவது முன்னூறு ஆண்டுகள் ப்ரம்மச்சர்ய வ்ரதம் இருந்து வேதங்களை அத்யயனம் செய்து கொண்டு; உடல் நலம் குன்றி மிகவும் இளைத்தவராகவும், சக்தியில் லாமல் படுத்திருப்பவராகவும் இருந்தார். அவர் முன்பு இந்திரன் தோன்றி உமக்கு மறுபடி நூறு ஆண்டுகள் ஆயுள் கொடுக்கிறேன். அதனுல் எவ்வித ப்ரயோஜனத்தை அடைவீர் எனக் கேட்டார். பரத்வாஜர் இந்த நூறு ஆண்டுகளை யும் அத்யயனம் செய்வதில் செலவிடுவேன் என்று கூறினுர்.

இந்திரன் பரத்வாஜருக்கு மூன்று மலைகளைக் காண்பித்து அவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு கையளவு மண் எடுத்து பரத்வாஜரே இந்த முன்னூறு ஆண்டுகளிலும் நீர் கற்றது ரிக், யஜுஸ், ஸாம வேதம் இவைகளில் இவ்வளவு தான். நீர் [கற்றது கைமண் அளவு. கல்லாதது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மலைகளின் அளவு. கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பது ஔவையின் வாக்யம்.]

நீ கண்ட மலைகளின் ஒவ்வொரு சிறு மண்ணும் வேதமே. மற்ற வேதங்களை அறிவது எக்காலத்திலும் முடியாதது. ஆகையினால் ஸாவித்ராக்னி ஸ்வரூபத்தைத் தெரிந்துக் கொண்டு ஆத்மாவை அறிந்தவனாக இரு என்று கூறினார். பரத்வாஜரும் ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்று ஸ்வர்க்கம் அடைந்தார்.

[வித்யையைக் கற்பதுடன் அதன் உட்பொருளைத் தெரிந்துக் கொள்வதும், அதனை உபயோகிக்கும் முறைகளை அறிவதும் அவசியம் என்பது பொருள்.]

எந்த மனிதன் ஸம்ஞானம் முதலிய இஷ்டகைகளின் பொருளான அக்னி, வாயு, இந்திரன், ப்ரஹஸ்பதி, ப்ரஜாபதி, ப்ரம்மா ஆகிய தேவதைகளை அறிகிறானோ, அவன் அந்த அந்த தேவதைகளின் ஸாயுஜ்யத்தை அடைகிறான்.

இந்த ஸாவித்ராக்னி, செங்கற்களை அடுக்குவதன் மூலம் தயாராகிறது. அதற்கு இறக்கை, வால் இரண்டும் உள்ளன. மனதால் தியானிக்க வேண்டிய இந்த ஸாவித்ராக்னி—வாயு ரூபத்தில் இருக்கிறார். அவருக்கு இறக்கை வால் முதலியன கிடையாது. உபாஸனைக்குரிய இந்த ஸாவித்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராக்னி வாயு ரூபமாக இருப்பதால் தியானிக்கும் பொழுது உலகில் ப்ரஸித்தமான அக்னியை அவரது முகமாகவும், சூரியனை அவருடைய சிரஸ்ஸாகவும் தியானிக்கவேண்டும். மற்ற தேவதைகள் அக்னி, சூரியன் இவர்களுக்கிடையில் வாயு ரூபமான அக்னியால் சேர்க்கப்படுகிறுர்கள். ஆகையால் இந்த வாயு ரூபமான அக்னி ஸாவித்ராக்னி எனப்படுகிறது.

இவர்களையும் இவற்றின் நடுவில் உள்ள மற்ற தேவதைகளையும் மனதால் மட்டும் அறியக் கூடிய ஸாவித்ராக்நியானது எப்படி வஸ்திரங்களை ஊசியானது இடைவெளியில்லாமல் தைக்கின்றதோ அம்மாதிரியே தேவதைகளை ஒன்று சேர்க்கிறது.

ப்ரச்னம் 2

நாசி கேத சயனம்.

அனுவாகம்—1

लोकोसि स्वर्गोऽसि ।

இந்த நாசிகேத சயனத்தில் ஸாவித்ர சயனம் போன்று வட்டமான ரேகைகள் உபயோகப் படுத்துவது இல்லை. 21 இஷ்டகைகள் ஸ்வர்ணத் துண்டுகள் அல்லது சுக்கான் கற்கள் சதுரமான இடத்தில் வைக்கப்படுகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதல் இஷ்டகையே, எல்லா உலகங்களுமாக இருக்கிறாய், ஸ்வர்க்க லோகமாகவும் இருக்கிறாய். எல்லையில்லாததும், அழிவற்றதுமான உன்னிடம் உலகம் முழுவதும் உள்ளது. எல்லா மனோரதங்களையும் பூர்த்தி செய்யக் கூடிய உன்னை பூமியில் வைக்கிறேன். ப்ரஜாபதி தேவதை உன்னைப் பூமியில் வைக்கட்டும். அவ்வாறு வைக்கப்பட்ட நீ நிரந்தரமாக இங்கு ப்ரதிஷ்டையாக இரு. உலகினை உள்ளடக்கிய தபோரூபமான இரண்டாவது இஷ்டகையே, உன்னை பூமியில் வைக்கிறேன். ப்ரஜாபதி உன்னை வைக்கட்டும். அதனால் நீ ஸ்திரமாக இரு.

(உபதானம் செய்கிறேன்.) இம்மாதிரியே தபஸை உள்ளடக்கிய தேஜோ ரூபமான இஷ்டகையே 3வது ஸமுத்ர ரூபமான இஷ்டகையே, 4-வது ஜலரூபமான இஷ்டகையே, 5வது பூமி ரூபமான இஷ்டகையே, 6வது அக்னி ரூபமான இஷ்டகையே, 7வது ஆகாய ரூபமான இஷ்டகையே, 8வது வாயுதேவதை ரூபமான இஷ்டகையே, 9வது தேவலோக ரூபமான இஷ்டகையே, 10வது ஆதித்ய ரூபமான இஷ்டகையே, 11வது சந்திரன் ரூபமான இஷ்டகையே, 12வது நக்ஷத்திர ரூபமான இஷ்டகையே, 13வது ஸம்வத்ஸர தேவதா ரூபமான இஷ்டகையே, 14வது ருதுரூபமான இஷ்டகையே, 15வது மாதங்களின் ரூபமான இஷ்டகையே, 16வது பக்ஷங்களின் ரூபமான இஷ்டகையே, 17வது பகல் இரவு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(அஹோராத்ரா) ரூபமான இஷ்டகையே, 18வது பௌர்ணமி, அமாவாசை, மாசிமாத க்ருஷ்ண பக்ஷாஷ்டமி ஆகிய மூன்று தேவதைகளின் உருவமானதும், எங்களுக்கு பலத்தைக் கொடுக்கக் கூடிய அன்னத்தைக் கொடுப்பவைகளுமான 19 வது இஷ்டகையே, சாந்தி, மிகுந்த குணங்கள், ஐச்வர்யங்கள் உடையதும், தேவர், தர்மம் இவற்றைக் காப்பாற்றுவதுமான, உலகைக்காப்பவளுமான 20வது இஷ்டகையே, பலம், சாந்தி இவைகளுடன் கூடிய மரணமற்ற தேவர்களின் இருப்பிடமுமான 21வது இஷ்டகையே உங்களை பூமியில் வைக்கிறேன்.

(உபதானம் செய்கிறேன்) ப்ரஜாபதி உங்களை வைக்கட்டும், நீங்கள் ஸ்திரமாக இருங்கள். இது வரை இஷ்டகைகள் உபதானம் செய்வது கூறப் பட்டது. 2வது அனுவாகத்தில் ஶ்ரீருத்ரப்ரச்னத் திற்கு மாற்று மந்திரம் கூறப்படுகிறது.

அனுவாகம்—2

त्वमग्ने रुद्रो असुरो महो दिवः ।

இந்த அநுவாகமானது नमस्ते रुद्र मन्यवे என்ற ஶ்ரீருத்ரப்ரச்னத்தைப் போன்றே இந்த அநுவாகமும் சத ருத்ரீயம் எனக் கூறப்படுகிறது.

ஹே ருத்ரரே, நீர் கோபத்துடன் கூடியவர், சத்ருக்களை அழிப்பவர், மிக உயர்ந்தவர், மிக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பலமுள்ளவர். மிகுந்த வேகமுடைய சிவப்பு நிற குதிரைகளுடன் செல்கிறீர். அக்னி ரூபமான ருத்ரரின் மூர்த்தி விசேஷங்கள் 33 ஆகும். இவர்கள் எனக்கு க்ருபை செய்பவராக இருக்கட்டும். எந்த விருப்பத்துடன் ஹோமம் செய்கிறேனே, அதனுடைய பயன் மூன்று உலகிலும் எனக்கு தன ஸம்ருத்தியைக் கொடுக்கட்டும். அடுத்த 3வது அனுவாகத்தில் வஸோர்த்தாரா மந்த்ரம் சொல்லப்படுகிறது.

அனுவாகம்—3

अग्ना विष्णू सजोषसा ।

சமகானுவாகத்தினுல் செய்யும் வஸோர்த்தாரா ஹோமத்தின் ப்ரதிநிதியாக இந்த அனுவாகம் கூறப்பட்டுள்ளது.

என்னிடம் அபிமானமுள்ள அக்னி, விஷ்ணு என்ற உங்களை என்னுடைய ஸ்தோத்ர ரூபமான வார்த்தைகள் சந்தோஷப்படுத்தட்டும்.

ராஞ்ஞீ, விராஞ்ஞீ ஸம்ராஞ்ஞீ ஸ்வராஞ்ஞீ அர்ச்சி:, முதலிய ப்ரகாசத்துடன் கூடிய தேவதைகளும் அக்னி, ஸோமன், ப்ரஹஸ்பதி, விச்வே தேவர்கள் முதலிய தேவதைகளும், உலகத்தைக் காப்பவர்களாக இருந்துக் கொண்டு என்னுடைய ஸ்தோத்ர ரூபமான வாக்கையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காப்பாற்றட்டும் நாங்களும் செல்வந்தர்களாக ஆகக்கடவோம்.

அனுவாகம்—4

अन्नपतेऽन्नस्य नो देहि ।

இந்த அனுவாகத்தில் அன்னத்திஞல் ஹோமம் செய்யப்படும் மந்திரம் கூறப்படுகிறது. ஆரோக்யத்தின் பொருட்டும், பலத்தின் பொருட்டும் அன்னத்தின் தேவதையான அக்னியே, அன்னத்தின் ஸாரத்திஞல் எனக்கு ஆரோக்யம், பலம் இவற்றைக் கொடு, ஏழ்மையிலிருந்து உயர்த்து. என் ஸம்பந்தமான மனிதர்கள், நாற்கால் பிராணிகள் இவைகளுக்கு புஷ்டியைக் கொடு. எங்களுக்கு தேவர்களுக்குரிய சுகத்தையும், ஸந்ததிகளையும் கொடு.

அனுவாகம்—5

सप्त ते अग्ने समिधः सप्त जिह्वाः ।

இங்கு விச்வப்ரீ என்ற ஹோம மந்திரம் சொல்லப்படுகிறது. ஹே அக்னியே, உன் ஹோமத்தில் உபயோகப்படும் ஸமித்துகள் ஏழு. அவை-அரசு, அத்தி, புரசு, வன்னி விகங்கதம், இடி தாக்கிய மர ஸமித் (கிடைக்காவிடில் பனியில் கருகிய மரஸமித்து அல்லது காற்றில் விழுந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மரத்தின் ஸமித்து) தாமரை. உன் ஜ்வாலை களான நாக்குகளும் ஏழு.

அவற்றின் பெயர்—காளீ, கராளீ, மனோஜவா, ஸுலோஹிதா, ஸுதூம்ரவர்ணா, ஸ்புலங்கினீ, விச்வரூபீ என்பவை.

ரிஷிகள்-மந்த்ரங்கள் ஏழு. இங்கு சொல்லப் பட்ட ஏழு ஸமித்துக்களை க்ரஹிப்பதற்கான ஏழு மந்திரங்கள் (தைத்திரீய ப்ராம்மணம் 2வது அஷ்டகம் 2வது ப்ரச்னம்) ஸ்தானங்கள் ஏழு— அவை ஆஹவனீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஸப்யம், ஆவஸத்யம், ப்ராஜாஹிதம், ஆக்னீத்ரம் என்று ஸோமயாக சம்பந்தமானவைகள் ஏழு.

ஏழு ஹோதாக்கள்—ஹோதா, ப்ரசாஸ்தா, ப்ராம்மாணாச்சம்ஸி, போதா, நேஷ்டா, அச்சா வாகர், ஆக்னீத்ரர் என்பவர்கள்.

ஹே அக்னியே, ஆஹவனீயம் முதலிய ஏழு இடங்களில் நெய்யினால் நிரப்பி ஜ்வாலையுடன் ப்ரகாசி. கிழக்கு திக்கை காக்கும் அக்னியும், தெற்கு திக்கைக் காக்கும் இந்திரனும், மேற்கு திக்கைக் காக்கும் சந்திரனும், வடக்கு திக்கைக் காக்கும் மித்ராவருணர்களும், மேல் திக்கைக் காக்கும் ப்ரஹஸ்பதியும், கீழ் திக்கைக் காக்கும் அதிதி தேவதையும் அந்த அந்த திக்குகளி லிருந்து வரும் சத்ருக்களைத் தடுத்து தங்களை அடையச் செய்யட்டும். எல்லா திக்குகளிலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வ்யாபகமான பரமாத்மா என்னுடைய மனோ அபிஷ்டங்களைப் பூர்த்தி செய்யட்டும்.

அனுவாகம்—6

यत्तेऽचित्तं यदु चित्तं ते अग्ने ।

ஹே அக்நியே, இந்த சயனத்தில் ஏதாவது மந்த்ரங்களின் குறைகள் இருந்தால் அவற்றை ஆதித்யன் முதலான தேவர்களும், அங்கிரஸ் முதலான ரிஷிகளும் பூர்த்தி உள்ளதாகச் செய்யட்டும். 21 இஷ்டகைகளினால் எந்த பலன் கிடைக்குமோ அவற்றின் பலனை அளி.

ஹே இஷ்டகையே, முன் சொல்லப்பட்ட இஷ்டகைகளினால் பூர்த்தி செய்யப்படாத இடங்களை இடைவெளியில்லாமல் பூர்த்தி செய். இந்த்ராக்நி, ப்ரஹஸ்பதி முதலிய தேவர்கள் இங்கு இஷ்டகைகளை வைத்தனர். அத்தேவர்களால் (ஆங்கிரஸ ரிஷியால் வைக்கப்பட்டது போல் வைக்கப்பட்ட நீ உறுதியாக இரு.

பின்பு ஐந்து மந்திரங்களால் மஹாக்னி சயனத்தில் உள்ள ஐந்து சிதிகளும் அடுக்குகள் தொடப்படுகின்றன. இங்கு ஒரே அடுக்காக இருப்பதால் 5 மந்திரங்களாலும் ஒன்றையே தொடவேண்டும். ஓ அக்நியே, யக்ஞத்தை பூர்த்தி செய்ய ஹோமத்தைப் பெற்றுக் கொண்டவராகவும், வணங்கத்தக்கவராகவும் இருக்கிறீர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நன்ருக ப்ரகாசிப்பவராகவும், குணங்கள் நிறைந்தவராகவும் இருக்கிறீர். மிகுந்த புத்தியைக் கொடுப்பவரும், யக்ஞத்திற்கு உபகாரமாக இருப்பவரும், எல்லா தேவர்களையும் இங்கு வரவழைப்பவரும், சத்ருக்களை அழிப்பவரும், சிறிதளவாயினும் ஹவிஸ்ஸைப் பெற்றுக் கொள்பவருமான உம்மை மனிதர்கள் துதிக்கின்றனர். யக்ஞத்திற்காக வேறு ஒருவரையும் அணுகுவதில்லை. எல்லா மனிதர்களுக்கும் உபகாரகனை இந்த அக்நி ஜனங்களுக்கு அன்னத்தை தருகிருர். அக்நியை உபாசிப்பவர்களுக்கு இந்த பூமிக்கு வந்து ஐச்வர்யத்தை அளிக்கிருர். ஓ அக்நியே. உன்னை உபாசிப்பவர்களுக்கு அன்னம் முதலிய ஸம்ருத்தியைக் கொடு. அந்த அக்னியானது எங்களை இரவும் பகலும் ஹிம்ஸிப்பவர்களிடமிருந்து காப்பாற்றட்டும்.

அனுவாகம்—7

अयं वाव यः पवते ।

இந்த அனுவாகத்தில் நாசிகேதாக்நி உபாஸனை கூறப்படுகிறது.

ப்ரத்யக்ஷமான வாயுவானது நாசிகேதாக்நியின் சிரோபாகமான கிழக்கு நோக்கியும், பின்பு இறக்கைப்பக்கமான தெற்கு நோக்கியும், பின்பு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பின்புறமான மேற்கு நோக்கியும், பின்பு வடபுறம் நோக்கியும், பின்பு எல்லா இடங்களிலும் சஞ்சரிக்கிறது.

இந்த உத்தாலக புத்ரரான நாசிகேதஸ் என்பவருடைய பெயருடைய இந்த அக்நி, மனிதன் எந்த அபிஷ்டத்துடன் உபாஸிக்கிருனோ அந்த அபிஷ்டங்களை கொடுக்கிருர். எவன் ஸ்வர்ண மயமான இஷ்டகைகளை த்யானிக்கிருனோ அவன் இருப்பிடம் முதலியவற்றை அடைகின்ரு. நாசிகேதாக்னியின் சரீரமாக ஸ்வர்கத்தை நினைக்கிருனோ, அவன் தன்னுடைய சரீரத்துடன் ஸ்வர்க்கம் அடைகிருன். (இந்த சரீரத்துடன் ஸ்வர்க்கத்தில் கிடைக்கக்கூடிய சௌக்யங்களை அடைகிருன் என்பது பொருள்). கழுத்தில் போடப்படும் பதக்கம் போன்ற ஆபரணத்தால் மிகுந்த ப்ரகாசமுள்ளவனுக ஆகிருன். சூரிய லோகத்திற்கு கீழ்ப்பட்டவை மேற்பட்டவை ஆகிய இரண்டு வித ஸ்வர்க்க லோகங்களில் அழிவற்ற சூரிய லோகத்தில் மேற்பட்ட உலகத்தை அடைகிருன். எவன் நாசிகேதாக்னியை உபாஸிக்கிருனோ அவன் மேலான ப்ரம்ம லோகத்தை அடைகிருன். உயரமான ரதத்திலிருந்து கொண்டு கீழே சுழலும் சக்கரத்தைப் பார்ப்பது போல் ப்ரம்மலோகத்தில் இருந்து கொண்டு பூலோகத்தில் இருக்கும் ப்ராணிகளின் ஆயுளை அபஹரிக்கும் இரவையும் பகலையும் பார்க்கிருன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம் 8ல் நாசிகேதருடைய வரலாறும், அவர் யமலோகம் சென்று யமனிடம் வரம் பெற்ற வரலாறு கூறப்படுகிறது.

அனுவாகம்—8

उशन् ह वै वाज श्रवसस्सर्व वेदसं ददौ ।

அன்னதானத்திஞல் கீர்த்தியையடைந்தவரும் கௌதம கோத்ரத்திலுண்டானவருமான வாஜச்ரவஸ் என்பவரின் புத்ரர்-உத்தாலகர், விச்வஜித் எனும் யாகமத்தியில் தன்னுடைய உடைமைகள் அனைத்தையும் ஹோமம் செய்தோருக்கு வழங்கினர். அவருடைய உபநயநத்திற்கு யோக்யமான 7 வயது வயதுடைய சிறுவஞன நாசிகேதஸ் என்பவன் தன் தகப்பஞர் ரித்விக்குகளுக்கு த்ரவ்யம் அனைத்தும் கொடுப்பதைப் பார்த்து, தன் தகப்பஞரைப் பார்த்து என்னை எந்த ரித்விக்குக்கு தானம் கொடுக்கிறீர்கள் என கேட்டான். தகப்பஞர் மௌனமாயிருக்க மறுமுறையும் மூன்ரும் முறையும் கேட்டான். நாசிகேதஸ் அடக்கமில்லாதவன் எனக்கோபம் கொண்ட வாஜச்ரவஸ் உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன் என்ருர். அச்சமயம் ஒரு அசரீரி வாக்யம் நாசிகேதஸை அனுக்ரஹ பூர்வமாகக் கூறியது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹே நாசிகேதஸே, உன்னை ம்ருத்யுவின் வீட்டிற்கு அனுப்புகிறேன், அதாவது இறந்து விடு என்று உன் தகப்பனுர் கூறியுள்ளார். ஹே நாசிகேதஸே நீ யமன் தன்னுடைய வீட்டை விட்டு வெளியே சென்றிருக்கும் காலமறிந்து அந்த யமன் வீட்டிற்கு செல். யமனுடைய மனைவி, குமாரர்கள் மிகவும் கேட்டுக் கொண்டும் ஆகாரமில்லாமல் மூன்று இரவுகள் அங்கு இரு. யமன் நான்காவது தினத்தில் வந்து எத்தனை இரவுகள் இங்கு இருந்தாய் எனும் போது மூன்று இரவுகள் இருந்தேன் என உண்மையைச் சொல். பிறகு முன் இரவு என்ன ஆகாரம் செய்தாய் எனக் கேட்கும்போது உன்னுடைய ஸந்ததிகளைச் சாப்பிட்டேன் எனக்கூறு. [க்ருஹஸ்வாமியின் வீட்டிற்கு வந்திருக்கும் அதிதி முதல் இரவு உணவில்லாமல் இருந்தால் வீட்டு யஜமானனின் ஸந்ததிகளை பாதிக்கும் என்றும், இரண்டாவது இரவு உணவில்லாமல் இருந்தால் க்ரஹஸ்தன் வீட்டில் இருக்கும் பசு முதலியவைகளின் க்ஷயமும், மூன்ருவது இரவு பட்டினியாக இருந்தால் க்ருஹஸ்வாமியின் புண்ணியங்கள் அனைத்தையும் அழிக்கிறது என்பது சாஸ்திரம்]

दिवातिथौ तु विमुखे गते यत्पातकं नृप ।
तदेवाष्टगुणं पुंसः सूर्योढे विमुखेगते ॥

[பகலில் உபசரிப்பு இல்லாமல் திரும்பிய அதிதியினுல் ஏற்படும் பாபத்தைப் போன்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எட்டு மடங்கு பாபம் இரவில் உபசரிப்பு இல்லா மல் இருக்கும் அதிதியினுல் ஏற்படுகிறது. (விஷ்ணு புராணம் அம்சம் 3 அத்யாயம் 11, ச்லோகம் 106]

அம்மாதிரியே நாசிகேதஸ் யமன் வெளியே சென்றிருக்கும் சமயம் யமன் வீட்டையடைந்து மூன்று இரவுகள் உணவில்லாமல் இருந்தார். (இரவுகள் என்பதால் நாட்கள் என்பது விளக்கம்) யமன் திரும்ப வந்தவுடன் சிறுவனை எவ்வளவு நாட்களாக இங்கு இருக்கிருய் எனக்கேட்டார். மூன்று இரவுகள் என்று நாசிகேதஸ் கூறினுன். யமன் முதல் இரவு என்ன ஆகாரம் சாப்பிட்டாய் என வினவ உன்னுடைய சந்ததிகளை என நாசி கேதஸ் கூறினுன். இரண்டாம் இரவு என்ன உணவு சாப்பிட்டாய் என உன்னுடைய கால் நடை சம்பத்துக்களை சாப்பிட்டேன் என்ருன். யமன் மறுபடி மூன்ருவது இரவு என்ன சாப்பிட் டாய் என வினவ உன்னுடைய புண்ணியகார்யங் களை என நாசிகேதஸ் கூறினுன்.

இந்த பதிலைக்கேட்ட யமன் நாசிகேதஸ் எல்லா வித்யைகளையும் நன்கு உணர்ந்தவன் என மதித்து, என்னுடைய வீட்டில் நீர் மூன்று இரவுகள் உணவில்லாமல் இருந்த பாபத்தை நிவர்த்தி செய்யும் வகையில் மூன்று வரங்கள் கேள் அளிக்கிறேன் என்ருர். நாசிகேதஸ் முதல் வரமாக என்னுடைய தகப்பனுரை நான் உயிருடன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அடையும்படி செய் என்று கேட்டான். இதனால், தான் உயிருடன் தன் தகப்பனாரை அடைய வேண்டும் என்றும், தன்னுடைய தகப்பனாருக்குத் தன் மேல் ஏற்பட்ட கோபம் நிவர்த்தி ஆக வேண்டும் என்றும் இரு விஷயங்களை முதல் வரனாக கேட்டான். இரண்டாவது வரனைக்கேள் என யமன் கூற, நாசிகேதஸ் என்னால் செய்யப் படக்கூடிய யக்ஞங்கள், குளம் வெட்டுதல் முதலிய க்ருஹஸ்த தர்மங்கள் இவைகளின் பலன்கள் அழிவற்றவையாக இருக்க வேண்டும் என, நாசிகேதாக்னியை உபாஸிப்பதனால் ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களின் பலன்கள் அழிவற்றவை ஆகும் என வரமருளினர். யமன் மூன்ருவது வரனைக்கேள் என, நாசிகேதஸ் ம்ருத்யுவை ஜயிக்கும் வழியைத் தருக எனக்கேட்க, யமன் நாசிகேதாக்நியை உபாஸிக்கும் வழியைச் சொல்ல, அந்த நாசி கேதாக்நியை உபாஸித்து, புனர்ஜன்மாவைத் தவிர்த்து ம்ருத்யுவை ஜயித்தார். (இந்த நாசிகேத வ்ருத்தாந்தம் கடோபநிஷத்தில் சிறிது வித்தியாசத்துடன் கூறப்படுகிறது. மூன்று இரவுகள் கழித்து வந்த யமனை நோக்கி யமனுடைய மனைவி, மந்திரிகள் முதலானோர் அதிதியான ப்ராம்மணர் அக்நியைப் போன்றவர், பாத்யம் ஆசமனம் இவைகளை கொடுத்து அவருடைய தாபத்தைத் தணிக்க வேண்டும். ஆகையினால் யமனே நாசிகேதஸுக்கு ஜலம் எடுத்து வந்து பாத்யம் கொடு என்றனர்).

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

[அதிதியானவர் ஆகாரமின்றி ஒரு வீட்டில் இருந்தால், வீட்டிலிருப்பவனுடைய காமங்கள், யக்ஞம், புண்யகர்மாக்கள் இவைகளின் பலன்கள், பசுபுத்ராதிகள் அனைத்தும் நசித்து விடுகின்றன என்றனர்.]

अतिथिं चागतं तत्र स्वशक्त्या पूजयेद्बुधः ।
पादशौचासन प्रह्वस्वागतोक्त्या च पूजनम् ॥
ततश्चान्न प्रदानेन शयनेन च पार्थिव ॥
(विष्णुपुराणं-३ अंशः, ११ अध्यायः, श्लोकः
१०४, १०५)

[வந்திருக்கும் அதிதியை தன்னுடைய சக்திக்குத் தக்கவாறு உபசரிக்க வேண்டும். அதிதியை நல்வரவு கூறி வணக்கத்துடன் கால் கழுவி, ஆஸனத்தில் அமரச்செய்து உணவு உண்ணச்செய்து இரவு நல்ல நித்திரை செய்யும் படி செய்யவேண்டும்.]

யமனும் ஓ நாசிகேதஸே, என்னுடைய வீட்டில் மூன்று இரவுகள் ஆகாரமின்றி இருந்த தோஷத்தை நீக்கி எனக்கு மங்களத்தைக்கொடு. நீ இங்கு ஆகாரமின்றி இருந்த மூன்று இரவு களுக்கும் மூன்று வரங்கள் கேள் என்றார். நாசி கேதஸ் முதல் வரமாக, என்னுடைய தகப்பனார் என் மீதுள்ள கோபத்தையும், என்னை உன்னிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுப்பியதையும் மறந்து என்னை வரவேற்க வேண்டும்.

யமன் உன்னுடைய தகப்பனுர் கோபம் நீங்கி முன்போலவே உன்னிடம் பிரியமாயிருப்பார் என வரமருள்கிறுர்.

நாசிகேதஸ் இரண்டாவது வரமாக, வியாதி, கிழத்தன்மை துக்கம், பசி, தாகம் இவைகளில்லாத ஸ்வர்க்க லோகமடையும் வழியான வேள்வியை எனக்கு அளி எனக் கேட்கிறுர்.

யமன் என்னுல் கூறப்படும் இந்த வேள்வியை நீ அறிந்தால் எல்லையற்ற ப்ரம்ம ஸாயுஜ்யத்தை அடைவாய் என்று, எவ்வளவு எண்ணிக்கைகளுடன் இஷ்டைகைகள் வைக்கப்பட வேண்டும், எம்மாதிரி வேள்வியைச் செய்ய வேண்டும் என்று நாசிகேதாக்நியின் முறையை உபதேசித்தார். இந்த வேள்வியானது உன்னுடைய பெயரால் நாசிகேதாக்நி என்று வழங்கும். நான் உன்னிடம் மிக்க ப்ரீதியுள்ளவனுக நான்காவது வரமொன்றும் தருகிறேன். வரத்தைக்கேள் என்று கூறி ரத்னங்கள் பதிக்கப்பட்ட ஸ்வர்ண ஹாரத்தையும் கொடுத்தார்.

நாசிகேதஸ் மூன்றாவது வரமாக, மனிதன் இறந்தபிறகு உடல், உறுப்புகள் மனம், புத்தி இவைகளிலிருந்து விடுபட்டு வேறு வஸ்துவுடன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆத்மா உள்ளது என்று ஒரு சாரரும், அம்மாதிரி ஆத்மா வேறுபட்ட வஸ்துவுடன் இல்லை என்று சிலரும் கூறுகின்றனர் என்றும் கேட்டார். யமனும், ஆத்மாவின் விஷயமானது தேவர்களாலும் அறிய முடியாத சூக்ஷ்மமான விஷயம். ஆகையினால் வேறு வரம் கேள் என்றார். நாசிகேதஸும், ஆத்ம தத்வமானது தேவர்களாலும் அறிய முடியாதது என்று தாங்கள் கூறினீர்கள். அறிய முடியாத இவ்விஷயத்தைக் கூற உம்மைத்தவிர வேறு யாராலும் முடியாது. ஆகையால் மிகுந்த பயனையளிக்க வல்ல ஆத்ம தத்வத்தை கூறுங்கள் என்றான்.

புத்ர பௌத்ரர்களுடன் நூறு வருஷம் ஆயுள், எண்ணற்ற பசு, யானை, குதிரை ஸ்வர்ணம், மிகுந்த விஸ்தீரணமுள்ள பூமி, அல்லது இவற்றுக்குச் சமமான மனோபீஷ்டங்கள் இவற்றைக்கேள், தருகிறேன் என்று யமன் கூறினார். நாசிகேதஸ் நாளை உயிருடன் இருப்பதே ஸந்தேகமாயிருக்கும்போது மற்ற ஸுகங்களால் என்ன பயன், ஸ்த்ரீ புத்ராதிகளால், தர்மம், பலம், புத்திகூர்மை, தேஜஸ், புகழ் இவைகள் வீணடைகின்றன. அளவற்ற தனமிருந்தாலும், மனிதனுக்கு திருப்தி ஏற்படுவது இல்லை. ஆகையினால் இவற்றைத் தவிர்த்து ஆத்மஞானத்தை உபதேசியுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறான். யமனும், நாசிகேதஸ் ஆத்மஞானம் பெற உரியபாத்திரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என ஆத்ம ஞானத்தை உபதேசிக்கிறார். இவ்விதம் கடோபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.)

எல்லா ப்ராணிகளுக்கும் உணவு முதலியவற்றைச் செய்வதால் பூஜார்ஹமான பலிமான் எனும் அக்நிக்கு ஹோமம் செய்யப்படுகிறது. தேடப்பட்டு அடையப்படும் பொருளுக்கு தேவதையான அனுவித்தி எனும் தேவதைக்கு ஸ்வர்கத்தை அடையும் பொருட்டு ப்ரஜாபதி ஹோமம் செய்கிறார்.

ஒரு சமயம் ப்ரஜாபதியானவர் ப்ரஜைகளை ச்ருஷ்டிக்கும் எண்ணம் கொண்டு தவம் இயற்றி ஸ்வர்ணத்தை உற்பத்தி செய்தார். அந்த ஹிரண்யத்தை சிருஷ்டி செய்யும் பாவத்திற்காக அக்நியில் ஹோமம் செய்தார். இம்மாதிரி மூன்று முறை ஹோமம் செய்தும் பயனில்லாமல் தன் ஹ்ருதயத்தின் ஸமீபத்தில் வைக்க ப்ரஜைகளை சிருஷ்டிக்கும பலனைத்தந்தது- ஆகையினால் [ஸ்வர்ணமானது ஜனங்களுடைய ஆபரணம், அன்னம் முதலிய மோகப் பொருள்களுக்கு காரணமாக ப்ரியத்தை ஸம்பாதிப்பதாக உள்ளது.]

ப்ரஜாபதியானவர் அந்த ஹிரண்யத்தை வேறு மனிதர் ஒருவருக்கு தானம் செய்ய நினைத்து, வேறு ப்ரதிக்ரஹிதா கிடைக்காததால் தானே அந்த ஹிரண்யத்தைப் பெற்று கொண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தன்னுடைய ஸ்ருஷ்டியைச் செய்வதில் சமர்த் ராஞர். கௌதம கோத்ரத்திலுதித்த முனிவர் களும், இந்த தக்ஷிணையின் மாஹாத்ம்யம் அறிந்து தாங்களும் தக்ஷிணைகள் பெற்று கொண்டு காரிய ஸமர்த்தர்கள் ஆஞர்கள்.

9வது அனுவாகத்தில் நாசிகேதாக்நி சயன ப்ரயோகம் சொல்லப்படுகிறது.

அனுவாகம்—9

तँहैतमेके पशुबन्ध एवोत्तरवेद्यां चिन्वते ।

உத்தரவேதி என்பது ஆஹவநீயாக்னியை வைக்குமிடம். இங்கு சயனம் எனும் வேள்வி செய்யப்படுகிறது முன்பு சில ரிஷிகள் இந்த நாசிகேதானிக்யை ஸத்ரயாகத்துடன் செய்து பலனை அடைந்தார்கள். அபிவிருத்தி காமனை யுடைய வாயுதேவன் இந்த நாசிகேதாக்நியை உபாஸித்து, உத்தமமான தனத்தையும், தன் இஷ்டம்போல் சஞ்சாரம் செய்யும் நிலையையும் பெற்றுன். இது போல் செய்யும் யஜமானனும் ஸ்வதந்திரமாக இருப்பான். வார்ஷ்ணி என்ற கோபலர் இந்த சயனம் செய் து ஆயிரக்கணக்கான பசுக்களை அடைந்தார். ப்ரஜாபதியானவர் அனைவராலும் மதிப்புமிக்கவராகவும், ப்ரஜைகள் மிகுந்தவராகவும், புகழ்மிக்கவருமாக இருப்பதற்கு மூன்று தடவை நாசிகேதாக்நி சயனம் செய்தார். அவை அனைத்தையும் அடைந்தார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேன்மையை அடைய விரும்பி இந்திரன் இச்சயனம் செய்தார். மேன்மையையடைந்தார். சூரியன் அமரத்துவம் அடைய சயனம் செய்தார். அமரத்வம் அடைந்தார். எவர்கள் தேஜஸ், புகழ், பிரம்மதேஜஸ் இவற்றை விரும்பி யே……என்ற மந்த்ரங்கள் உச்சரித்து சயனம் செய்கிறார்களோ அவர்கள் தேஜஸ், புகழ், பிரம்ம தேஜஸ் அடைகிறார்கள்.

மிகுந்த தக்ஷிணை விரும்புவோர் ''ப்ராச் யேஹி'' என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்தால் மிகுந்த தக்ஷிணை கிடைக்கும். இஷ்டகைகளின் மீது ப்ருஷ்டோதிவி என்ற மந்திரத்தால் மணலால் நிரப்பி த்வமக்நே-ருத்ரோ என்ற அனுவாகத்தால் நான்கு ஹோமங்கள் செய்யவேண்டும். இந்த மந்த்ரம் மஹாக்னிசயனத்தில் உள்ள ஸ்ரீருத்ர மந்த்ரத்தில் ப்ரதிநிதியாக இங்கு விநியோகம். அம்மாதிரியே வஸோர்த்தாரையில் சமகத்தின் பிரதிநிதியாக இங்கு அக்நா விஷ்ணு என்ற மந்த்ரம் அந்நபதே என்ற மந்த்ரத்தினால் அந்த ஹோமம் செய்யவேண்டும். பின் ஸப்ததே அக்நே என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

அனுவாகம்—10

यां प्र॒थ॒मामिष्ट॑का॒मु॒प॒द॒धाति ।

இந்த அனுவாகத்தால் நாசிகேத சயனத்தில் பிரயோஜனங்கள் சொல்லப்படுகின்றன. முதல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இஷ்டகையினுல் பூலோகத்தை ஜயித்து தேவர்களுக்கு ஸமானமாக ஆகிருன். இரண்டாவது, மூன்ருவது இஷ்டகைகளினுல் மேல் லோகம், ஸ்வர்க்க லோகம் இவற்றை ஜயிக்கிருன். அதன் பின் வைக்கப்படும் 18 இஷ்டகைகளால் ஆதித்ய மண்டலம் வரையுள்ள எல்லா லோகங்களையும் ஜயிக்கிருன். நாசிகேதாக்நியானது ஸம்வத்ஸரத்தின் ஸ்வரூபமாக த்யானிக்கப்பட்டால் எப்படி உலகில் நல்ல மழை பெய்வதனுல் ஜனங்களுக்குத் தேவையான பயிர்கள், தான்யங்கள், விருத்தியாகி ஜனங்களின் தேவையை பூர்த்தி செய்கின்றதோ, அம்மாதிரி நாசிகேதாக்நியை உபாஸிப்பவர்கள் எல்லா அபீஷ்டங்களையும் பூர்த்தி செய்கிறது. கிழட்டுத்தன்மை அவனை அடைவதில்லை. முதுமையை யடையாமல் ஸ்வர்க்கமடைந்து ஆதித்ய லோகம் அடைகிருன்.

மூன்ருவது ப்ரச்னம்

இந்த ப்ரச்னத்தில் சாதுர்ஹோத்ர சயனமும், வைச்வச்ருஜ சயனமும் கூறப்படுகின்றன.

அனுவாகம்—1

तुभ्यं ता अङ्गिरस्तम॒ाऽश्याम॒ तं काममग्ने ।

திவிச்யேநீயம் என்ற இஷ்டியின் யாக விதானத்தில் புரோனுவாக்யை என்ற மந்திரத்தால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ரவ்யத்தைக் கையிலெடுத்துக் கொள்ளவும், யாஜ்யை என்ற ஹோமம் செய்யும் மந்த்ரம் இவற்றின் குறிப்புகள் கொடுக்கப்படுகிறது,

காமனென்னும் அக்னி, ஆசா எனும் தேவதை, அனுமதி, ப்ரம்மா, யக்ஞம், ஜலத்தின் அபிமானி தேவதை (அப்தேவதை) பலிமான் எனும் அக்நி, அனுவிதி, ஸ்விஷ்டக்ருத் எனும் 9 தேவதைகளுக்கு ஹோம மந்தரங்கள் சொல்லப்பட்டுள்ளது.

புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களின் ஆரம்பம் கூறப்பட்டுள்ளது.

அனுவாகம்—2

देवेभ्यो वैस्वर्गोलोकस्तिरोऽभवत् ।

ஒரு சமயம் தேவர்களின் பார்வையிலிருந்து ஸ்வர்கலோகம் மறைந்துவிட்டது.

தேவர்கள் பிரஜாபதியை ப்ரார்த்திக்க அவர் இஷ்டி ஒன்று செய்து ஸ்வர்க்கத்தை தெரியும்படி செய்தார். [உலகில் மனிதர்கள் தங்களுடைய உண்மைப் பெயர்களைவிட உறவின் முறைப் பெயர்களாலோ, அல்லது அன்புடன் பிறர் வைத்த (செல்லப்பெயர்)பெயர்களாலோ திருப்தியடைகின்றனர்].

ப்ராஜாபதியானவர் காமனெனும் அக்னி, ஆசா எனும் (கிடைக்கக்கூடிய லாபம் இப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொழுதா பின்பா என எதிர்பார்த்தல் ஆசா) தேவதை, அனுமதி அவர்களுக்கு ஹோமம் செய்து ஸ்வர்க்க லாபம் அடைந்தார்.

பிரம்மா எனும் மந்திர தேவதையின் அனுக்ரஹமில்லாவிட்டால் மந்திரங்களுக்கு பலமில்லை. ஆகையால் ப்ரம்மாவிற்கு ஹோமம் செய்யப்படுகிறது. யக்ஞங்கள் தேவதைகளை உத்தேசித்து ஹோமத்ரவ்யங்களைப் பெற்று தேவர்களுக்கு கொடுக்கின்றன. ஆகையினுல் யக்ஞத்திற்கு ஹோமம் செய்யப்படுகிறது. ஓஷதிகள், மரங்கள் முதலிய மனிதன் ஜீவிப்பதற்கு வேண்டிய சாதனங்களுக்கு ஜலம் அவசியம். அதனுல் அதன் அபிமானி தேவதைக்கு ஹோமம் செய்யப்படுகிறது.

அனுவாகம்—3

तपसा॑दे॒वा दे॒व॒ता॑मग्र॑ आयन् ।

ஆபாத் என்ற இஷ்டிகளின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள் சொல்லப்படுகிறது 1. முதலில் தபஸ் எனும் தேவதைக்கும் 2. இரண்டாவது ச்ரத்தை எனும் தேவதைக்கும் ஹோமம் (ச்ரத்தையில்லாமல் செய்யப்படும் ஹோமம், தானம், தபஸ் இவை நன்மையற்றவை, ப்ரயோஜனமில்லாதவை.) 3. சத்யம் எனும் தேவதை, 4. திடமான மனம், 5. சாஸ்த்ர ஸம்மதமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நடத்தை இவைகளின் அபிமானி தேவதைகளுக்கு ஹோமம் செய்யப்படுகிறது.

அனுவாகம்—4

देवेभ्यो वै स्वर्गो लोकस्तिरोऽभवत् ।

ஒரு சமயம் தேவலோகம் தேவர்களுக்குப் புலப்படாமல் ஆயிற்று. அவர்கள் ப்ரஜாபதியிடம் கூறினர்கள். ப்ரஜாபதியே, எங்களுக்கு ஸ்வர்க்கலோகம் தெரியாமல் ஆகிவிட்டது. கண்டுபிடியுங்கள் எனக் கூறினர். ப்ரஜாபதி யாகங்கள் செய்தார். தேவலோகம் புலப்படவில்லை. மறுபடியும் இஷ்டிகள் செய்தார். தேவலோகம் தென்பட்டது. ஐந்து இஷ்டிகள் சொல்லப்படுகின்றது.

5 இஷ்டிகளிலும் முதலில் அக்னிக்கு புரோடசம், நடுவில் தபஸ் முதலிய விசேஷ தேவதைகளும், மூன்ருவதாக अनुमति தேவதைக்கு சருஹவிஸ் என்று மொத்தம் 15 ஹவிஸ்ஸுக்கள் கொண்ட 5 இஷ்டிகள் உள்ளன.

அனுவாகம்—5

ब्रह्म वै चतुर्होतारः ।

இந்த அனுவாகத்தில் சாதுர்ஹோத்ரம் எனும் சயனம் சொல்லப்படுகிறது. மந்தரங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுள், சதுர்ஹோத்ரு மந்த்ரங்கள், பஞ்ச ஹோத்ரு மந்த்ரங்கள், ஷட்ஹோத்ரு மந்த்ரங்கள், ஸப்தஹோத்ரு மந்த்ரங்கள், தசஹோத்ரு மந்த்ரங்கள் அனைத்தும் சதுர்ஹோத்ரு மந்த்ரங்கள் எனவே கூறப்படுகின்றன.

யக்ஞத்தில் ஒரு ஸாதனமானது ஹோத்ரு மந்த்ரம். சதுர்ஹோத்ரு மந்திரத்தில் ப்ருத்வி அபிமானி தேவதை பஞ்சஹோத்ரு மந்த்ரத்தில் அக்னி, ஷட்ஹோத்ரு „ மந்திரங்களில் வாக் தேவதை, ஸப்தஹோத்ரு மந்திரங்களில் மஹா ஹவிஸ், தசஹோத்ரு மந்த்ரங்களில் வாக்பதி தேவதை. இவைகள் ஆயுஸ் காமன், ப்ரஜையை விரும்புவர், பசுவை விரும்புவர் சயனம் செய்ய வேண்டும்.

இந்த மந்திரங்களை எவன் வனத்தில் சென்று குருமுகமாக அத்யயனம் செய்கிறானோ, அவன் ஸ்வர்க்கத்தை அடைகிறான். இஷ்டகைகள் வைப்பதற்கு க்ரமம் மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. முதலில் கிழக்குப் புறத்தில் தென் வடலாக கோடில் வரிசையாக தென்புறத்தில் ஆரம்பித்து பத்து கற்கள் (இஷ்டகைகள்) வைக்கப்படுகின்றன.

தசஹோத்ரு மந்திரங்கள் 1. ச்ருக் எனும் ஹோமம் செய்யும் பாத்திரத்தின் தேவதை சித் (எனும் மன விசேஷம்). 2. நெய்யின் தேவதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சித்தம் 3. வேதியின் தேவதை வாக். 4 பர்ஹிஸ் எனும் தர்ப்பங்களின் தேவதை ஆதீதம். (உச்சரிக்கப்படுவது). 5. அக்நி-அதிதேவதை கேது (அறிவது). 6. அக்நி-அதிதேவதை விஞாதம் (அறிந்து பொருளை நன்குணர்வது) 7. ஹோதா (ஹோமம் செய்பவர்) அதிதேவதை வாக்பதி 8. உபவக்தா அதிதேவதை மனம், 9. ஹோமத்ரவ்யமான ஹவிஸ்-தேவதை ப்ராணன் 10. அத்வர்யு அதிதேவதை ஸாமகானம், இவ்விதமாக பத்து தேவதைகளைச் சொல்லி இங்கு ஸ்திரமாக இருஎன கற்கள் வைக்கப்படுகின்றன. தென்புறத்தில் மேல்புறமிருந்து கிழக்கு நோக்கி கோட்டில் நான்கு கற்கள் வைக்கப்படுகின்றன.

அவை முறையே 1 ஹோதாவின் தேவதை ப்ருதிவி, 2. அத்வர்யு அபிமானிதேவதை தியுர் லோகம், 3. ஆக்நீத்ரர்-ருத்ரர், 4. உபவக்தா (ஹோமம் செய்யும் சமயம் ப்ரம்மாவின் ஸமீபம் இருந்து வருபவர்). ப்ரஹஸ்பதி ஆகியவர்களுக்கு நான்கு கற்கள் வைக்கப்படுகின்றன.

மேற்குப் புறத்தில் தென்புறமிருந்து வடக்கு நோக்கி ஐந்து கற்கள் வைக்கப்படுகின்றன 1. ஹோதாவின் அதி தேவதை அக்நி, (2,3) அத்வர்யு, ப்ரதி ப்ரஸ்தாதா-அச்விநீதேவர்கள், 4. ஆக்நீத்ரர்-த்வஷ்டா, 5. உபவக்தா-மித்ரர் ஆகியவர்களுக்கு 5 கற்கள் (இஷ்டகைகள்) வைக்கப்படுகின்றன. வடக்கு புறத்தில் மேல்புறமிருந்து கிழக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நோக்கி ஆறு கற்கள் (இஷ்டகைகள்) வைக்கப்படு கின்றன. 1. ஹோதாவின் தேவதை வாக், 2. பத்நீயின் அதிதேவதை தீக்ஷா, 3. அத்வர்யு-வாயு 4. (அபிகரர் ப்ரம்மாவின் ஸமீபமிருப்பவர்) அப் தேவதை 5. ஹவிஸ் தேவதைமனம், 6. ஜுஹோமி என்ற கார்ய விசேஷணம் - தபஸ் ஆகியவர் களுக்கு ஆறு கற்கள் வைக்கப்படுகின்றன.

மத்தியில் (நடுவில்) மேற்கிலிருந்து கிழக்கு புறம் நோக்கி கோட்டில் ஏழு கற்கள் வைக்கப்படு கின்றன. அவை 1. ஹோதா-மஹா ஹவிஸ், எனும் மஹர்ஷி 2. அத்வர்யு-ஸத்யஹவிஸ் எனும் மஹரிஷி 3. ஆக்நீத்ரர்–அச்யுதபாஜா எனும் மஹ ரிஷி 4. உபவக்தா - அச்யுதமனு எனும் மஹரிஷி 5. ப்ரஸ்தோதா - அநாத்ருஷ்யர் எனும் மஹரிஷி, 6. ப்ரதிஹர்த்தா-அப்ரத்ருஷ்யர் எனும் மஹரிஷி, 7. உத்காதா-அயாஸ்யர் எனும் மஹரிஷி என்ற ஸப்தஹோத்ரு மந்தரங்களால், ஏழு கற்கள். அதன்பின் ஹ்ருதயம் யஜுஸ், பத்நீ என்ற பெய ருள்ள கற்கள் வைக்கப்படுகின்றன.

க்ரஹம் என்ற இஷ்டகைகளும் देवस्य त्वा-என்ற प्रतिग्रह अनुवाक मந்திரங்களால் வைக்கப்படும் ப்ரதி க்ரஹம் என்ற இஷ்டகைகளும் लोकंपृणा என்ற மந்திரத்தால் வைக்கப்படும் இஷ்டகைகளும், அவகாசத்தை அனுசரித்து வைக்கவேண்டும். ரதம் இருக்கும் அளவுள்ள ப்ரதேசத்தில் அடுக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்வாறு சயனத்தை ஆதாரமாக வைத்து பசுபந்தம் அல்லது அக்னிஷ்டோம ஸோம யாகம் செய்தால் இவ்வுலகில் ஜயம் பலன். பூமி யிலுள்ள சுகபோகங்கள் கிடைக்கும். சயனத் துடன் அதிராத்ரம் செய்தால் ஸ்வர்க போகம் கிடைக்கும். சயனத்துடன் அஹீன யாகமோ, ஸத்ர யாகமோ செய்தால் எல்லா அபீஷ்டங் களும் கிடைக்கும்.

இந்த சயனத்திற்கு தக்ஷிணை - கோ. இரு பத்தோரு பசுக்களைக் கொடுப்பதால் ஸ்வர்க்க லோகத்தை அடைகிறான். (பூராதி ஸத்யலோக பரி யந்தம்) நூறு கோக்கள் கொடுப்பதால், நீண்ட, ஆயுள் முதலியவைகளை அடைகிறான். ஆயிரம் கோக்களைக் கொடுப்பதால், ஆயிரக்கணக்கான போக வஸ்துக்களுடன் கூடிய ஸ்வர்க்கத்தை அடைகிறான்.

ஒவ்வொரு கல்லுக்கும் (இஷ்டகைக்கும்) ஒரு கோ விதம் ஒரு வயது முதல் ஐந்து. வயது வரை யுள்ள பசுமாடுகளைக் கொடுப்பதால் எல்லாவித காமனைகளையும் அடைகிறான். ஸ்வர்ணத்தைக் கொடுப்பதால் மிகுந்த ப்ரகாசமுள்ளவனாக ஸ்வர்க்கமடைகிறான். வஸ்த்ரத்தைக் கொடுப்பத னால் ஆயுள் வ்ருத்தியாகிறது.

சதுர்ஹோத்ருமந்திர தேவதா ரூபமான ஸபையில் உள்ள வேத சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணர்களை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தக்ஷிணை கொடுத்து திருப்தி படுத்தவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் யாகமும் நஷ்டம், சயனாக்னியும் நஷ்டமாய்விடும். ஆகையால் தன் சிரத்தைக்குத் தகுந்தபடி தக்ஷிணை கொடுக்கவும்.

இஷ்டகைகள் ஸ்வர்ணத்தினுல் ஆனவை. விரலின் மூன்று பர்வாக்களில் முதல் பர்வா, அதாவது விரல் நுனியிலிருந்து முதல் பர்வா வரை உள்ள பரிமாணத்தில் இஷ்டகை இருக்க வேண்டும். ஹிரண்யம் தேஜஸின் ஸ்வரூபம். ஸ்வர்ணம் கிடைக்காவிடில் நெய்யில் நனைக்கப் பட்ட சுக்கான் கற்கள் உபயோகிக்கலாம். நெய் யும் ஸ்வர்ணம் போல் தேஜஸின் ஸ்வரூபம். முடி வில் सौत्रामणी யாகம் அல்லது मैत्रावरुणेष्टि செய்ய வும். இச்சயனங்கள் அனுஷ்டிப்பவர், மந்த்ரங் களில் கூறப்பட்ட தேவதைகளின் ஸாமீப்யத்தை அடைகிறுர்கள். செய்யப்பட்ட ஹோமங்களில் அவரவர்களின் ச்ரத்தையை அநுஸரித்து பயனை யடைகிறுர்கள்.

முடிவில் ப்ரம்மஸாயுஜ்யமடைகிறுர்கள்.

அனுவாகம்—6

यच्चामृतं यच्च मर्त्यम् ।

இது முதல் நான்கு அனுவாகங்களில் வைச்வ ஸ்ருஜ் சயனம் சொல்லப்படுகிறது. இச்சயனத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் ஸாவித்ர சயனம் போன்ற ரத சக்ர வடிவான் வட்டத்தில் மூன்று வட்ட வடிவு கோடுகள் போடப்படுகின்றன. அவற்றில் வெளிப்புறம் உள்ள வட்டக் கோட்டில் பதினெட்டு இஷ்டகைகள் கிழக்கில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

1) அழிவில்லாத வஸ்துக்களின் ரூபமாக இஷ்டகை, அழிவுள்ளவை தாவரம், ஜங்கமம் என்ற எல்லா ரூபமான இஷ்டகை. 2) ஸ்த்ரீ புருஷ நபும்ஸக ரூபமான இஷ்டகைகள். 3) பூமியில் இருக்கும் எண்ணற்ற மண் தூளிகள். 4) பசுக்களுக்கு புஷ்டி தரவல்ல, ஸ்வரூப இஷ்டகைகள். 5) ஜலம், பூமி இவற்றில் இருக்கும் மணல் ரூப இஷ்டகை 6) பூமியின் மேலிருக்கும் சுக்கான் கற்கள். 7) பூமியின் மேலிருக்கும் பாறைகள்: 8) பூமியின் மேல் இருக்கும் கொடிகள். 9) பூமியின் மேல் இருக்கும் செடிகள், பயிர்கள். 10) பூமியின் மேல் இருக்கும் மரங்கள். 11) நாட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள். 12) மனிதர்கள், பசுக்கள், வயற்றினுல் சஞ்சரிக்கும் பாம்பு முதலிய ஊர்வன. 13) தேவர்கள், மனிதர்கள் உபயோகிக்க கூடிய பூச்சுகள் மைகள். 14) இரும்பினுல் செய்யப்பட்ட ஆயுத வகைகள். 15) தாமிரம் முதலியவற்றினுல் செய்யப்பட்ட பாத்திரம் முதலியவை. 16) ஈயம், துத்தநாகம், இவற்றினுல் செய்யப்பட்டவை. 17) தேவர். மனிதர் இவர்களுக்கு உபயோகப்படக் கூடிய ஸ்வர்ணம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெள்ளி முதலியன. 18) தேவர், மனிதர் இவர்களுக்கு உபயோகப்படக் கூடிய பசும்பொன் இந்த ரூபமான 18 இஷ்டகைகளே, இங்கு ஸ்திரமாக இருங்கள் என வைக்கப்படுகின்றன.

அனுவாகம்—7

सर्वांदिशो दिक्षु ।

வைச்விஸ்ருஜ சயனம், மூன்று வட்டக் கோடுகளுள் நடுக்கோட்டில் பதினைந்து இஷ்டகைகள் வைக்கப்படுகின்றன்.

1. கிழக்கு முதலான திக்குகள், அவற்றிலுள் அடங்கிய மலைகள் போன்ற ஸ்திரப் பொருள்கள் ரூபமான இஷ்டகை. 2 ஆகாயத்தில் இருக்கும் பொருள்கள். 3. ஆகாயத்தில் வசிக்கும் கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள். 4. ஆகாயத்தில் மேகங்களில் இருக்கும் அதிகமான ஜலம். 5. மழையினால் ஏற்படும் ஜல ஸமூகம்; காற்றினால் கொண்டு வரப்படும் ஜல ஸமூகம், மரங்களில் மேல்புறம் இருக்கும் ஜல ஸமூகம். 6. ஆகாச கங்கை, ஆகாயம், மலை இவற்றில் வியாபித்து இருக்கும் பனி ஸமூகம். 7. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் கிரணங்கள், மூடுபனி எனச் சொல்லப்படும் பனி, 8. மின்னல் கர்ஜனையுடன் கூடிய மேகங்கள், இடிகள். 9 ப்ரவஹிக்கும் நதிகள், அவைகளில் சஞ்சரிக்கும் மீன் முதலிய பிராணிகள் 10.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிணறு, குளங்கள், ஏரிகள் இவற்றில் இருக்கும் சலனமற்ற நீர். 11. ஆகாயத்தில் இருக்கும் மேகங்கள், அவைகளிலிருந்து பூமியில் வரும் மழை. 12. ஆகாயத்தில் இருக்கும் உஷ்ணம், ப்ரகாசம், இருட்டு ஆகியவை. 13. காற்று, ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பக்ஷிகள், யக்ஷ ராக்ஷஸாதிகள். 14. அக்நி, சூரியன், சந்த்ரன், மித்ரன், வருணன், பகன், என்ற தேவர்கள். 15. உயிருள்ள மனிதன் போன்ற பிராணிகளின் ஸத்யம், ச்ரத்தை, தபஸ், பொறுமை, பெயர், உருவம் போன்றவைகள் ரூபமான இஷ்டகைகள் பதினைந்து வைக்கப்படுகின்றன.

அனுவாகம்—8

सर्वान्दिवꣳ सर्वान्देवान्दिवि ।

இந்த அனுவாகத்தில் மூன்று வட்டக் கோடுகளின் உட்புறம் இருக்கும் மூன்ருவது வட்டக் கோட்டில் வைக்கப்படும் எல்லா தேவலோகங்கள், எல்லா தேவதைகள் ரூபமான இஷ்டகைகள்.

1) எல்லா தேவ லோகங்களிலும் இருக்கும் தேவர்கள் முதலியோர், 2) ஆகாயத்தில் இருக்கும் எல்லா நக்ஷத்திரக் கூட்டங்கள், 3) ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம் என்கிற நான்கு வேதங்கள், 4) இதிஹாஸங்கள், புராணங்கள், 5) எல்லா லோகங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள், அவைகளில் வசிக்கும் பிராணிகள், 6) மந்த்ர ஸமூகங்கள், மற்றவை, உறைபவை, 7) எல்லா பகல் இரவுகள், நாட்கள், பக்ஷங்கள். 8) எல்லா மாஸங்கள், ருதுக்கள், ஸம்வத்ஸரம், 9) முன்பு உண்டானவை, ஏற்பட வேண்டியவை, இப் பொழுது இருப்பவை பிற்காலங்களில் ஏற்படு பவை ஆகியவற்றின் அபிமானி தேவதா ரூபமான இஷ்டகைகள், ஒன்பது வைக்கப் படுகின்றன.

உள் ரேகையில் இஷ்டகைகள் வைப்பதற்கான மந்திரங்கள் 8ம் அனுவாகத்தில் சொல்லப்பட்டு தக்ஷிணை கொடுக்கும் பொழுது ஸதஸில் அமர்ந்து ப்ரம்மாவினுல் சொல்லப்படும் 4 மந்திரங்கள் 9ம் அனுவாகத்தில் சொல்லப்படு கின்றன.

அனுவாகம்—9

ऋचां प्राची महतीदिगुच्यते ।

ரிக்வேதத்தின் அபிமானியான தேவதை களுக்கு பெரிய (பொருந்திய) கிழக்கு திக்கு ப்ரிய மானது என்று கூறப்படுகின்றது. யஜுர் வேதத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தின் அபிமானியான தேவதைகளுக்கு மிகவும் விஸ்தாரமான தெற்கு திக்கு ப்ரியமானது. அங்கிரஸ ரிஷிகள் ஸம்பந்தமுள்ள அதர்வண வேத தேவதைகளுக்கு மேற்கு திக்கு ப்ரிய முள்ளது. ஸாமவேத தேவதைகளுக்கு ப்ரிய மானது குணம் மிக்க வடக்கு திசை இந்த நான்கு வேதங்களும் ஸூர்யனுடைய நான்கு திக்குகளிலும் இருந்துக் கொண்டு, தங்கள் கடமைகளைச் செய் கின்றன.

முற்பகலில் ரிக் வேதத்தாலும், மத்யானத் தில் யஜுர் வேதத்தாலும், அஸ்தமன காலத்தில் ஸாம வேதத்தாலும் உபாஸிக்கப்படும்; ஆகாயத் தில் சஞ்சரிக்கும் ஸூரியன் மூன்று வேதங்களுட னும் தன்னுடைய அன்றாடப் பிரயாணத்தைத் தொடருகின்றான். அறிஞர்கள், ஸூரியன் முதலான தேவதைகளின் உருவம் ரிக் வேதத்தினால் உண்டாகிறது என்றும், அவர்களின் செயல்கள் யஜுர் வேதத்தினால் ஏற்படுவதாகவும், அந்த தேவதைகளின் ப்ரகாசமானது ஸாம வேதத்தால் உண்டாவதாகவும் கூறுகின்றனர். வைச்ய வர்ணம் (ஜாதி) ரிக் வேதத்தில் உண்டானது என்றும், க்ஷத்ரிய வர்ணத்தின் பிறப்பிடம் யஜுர் வேதம் என்றும், ப்ராம்மணர்களின் பிறப்பிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸாம வேதம், என்றும் முன்ஞேர்களான ரிஷிகள் தங்கள் சிஷ்யர்களுக்கு கூறியுள்ளனர். முற்காலத்தில் விஸ்வஸ்ருஜ் எனும் யாகத்தை அறிந்த தேவர்கள் நியமத்துடன் இருந்து அநேக ஆயிரம் ஆண்டுகள் ஸத்ரம் என்னும் யாகம் செய்தனர்.

அந்த யாகத்தில் தபஸ் யஜமான்ராக இருந்தார். யஜமானர் ஸங்கல்பம் செய்துக் கொண்டு யாகம் செய்பவர். மந்திரங்கள் தானே ப்ரம்மா எனும் ஸ்தானத்தில் இருந்தார். ப்ரம்மா யக்ஞ கார்யங்கள் சரிவர நடப்பதற்கு காரணமானவர்.

ஸத்யத்தின் அபிமான தேவதை ஹோதா எனும் ரித்விக்காக இருந்தது. தேவர்களால் உண்ணப்படும் அம்ருதம் உத்காதா என்பவரின் கடமையைச் செய்தது. கடந்த காலத்தின் அபிமானி தேவதை ப்ரஸ்தோதா என்பவராகக் கடமையைச் செய்தது. எதிர்காலத்தின் அபிமானி தேவதை ப்ரதிஹர்த்தா எனும் ரித்விக்காக ஸாம கானம் செய்யும் செயலைச் செய்தது. இந்த ஸத்ரம் எனும் யாகத்தை முழுவதும் அநுஷ்டிக்க விரும்பும் தேவதைகளுக்குப் ப்ராண வாயு அத்வர்யு எனும் ரித்விக்காக இருந்தது. ப்ரயோகத்தை நன்கு அறிந்த அபானன் 'ப்ரதிப்ரஸ்தாதா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எனும் ரித்விக்காக இருந்தது. ருது ஸம்பந்தியான தேவதைகள் உபகாதா என்னும் ரித்விக்காக இருந்தன. யக்ஞத்தில் ஸாம கானம் செய்யும் போது உடன் ஸாமம் சொல்பவர் உபகாதா. ருது தேவதைகள் ஸதஸ்யர் என்னும் பதவியில் இருந்தன. ஸதஸ்யர் எனும் அறிஞர்கள் வேள்வி சரியாக நடக்கிறதா எனக் கவனிப்பவர்கள். பக்ஷங்களும், மாதங்களும், சமஸாத்வர்யுக்கள் என்ற ருத்விக்குகளாக ஆயின. பிரம்ம ஸம்பந்தமான சாஸ்திரங்களை விச்வஸ்ருஷ்டிக்களின் தேஜஸ் ப்ராம்மணாச்சம்ஸின் எனும் ரித்விக் ஸ்தானத்தை அலங்கரித்து கூறியது. விச்வஸ்ருஜ் யாகத்தை அறிந்தவரின் புகழ் அச்சாவாகர் எனும் ரித்விக்காக ஆயின.

அவர்களின் நேர்மையான எண்ணம் ப்ரசாஸ்தா எனும் ரித்விக்காக ஆனது. அவர்களின் ஸம்பந்தமான ஜலரூபம் யக்ஞத்தில் ஸோம ராஜா எனும் பாத்திரத்தை தாங்கும் பீடமாக ஆயிற்று. அவர்களுடைய பலம் த்ருவம் என்னும் யக்ஞ ஸாதனத்தைக் (பாத்ரத்தை) காப்பாற்றும் த்ருவ கோபனாக ஆயிற்று. அவர்களின் ஸம்பந்தமான, காரியங்களைச் சாதிப்பதில் சாமர்த்யம் க்ராவஸ்துத் என்ற ருத்விக் ஆகி, ஸோமரஸம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸாம வேதம், என்றும் முன்னோர்களான ரிஷிகள் தங்கள் சிஷ்யர்களுக்கு கூறியுள்ளனர். முற்காலத்தில் விஸ்வஸ்ருஜ் எனும் யாகத்தை அறிந்த தேவர்கள் நியமத்துடன் இருந்து அநேக ஆயிரம் ஆண்டுகள் ஸத்ரம் என்னும் யாகம் செய்தனர்.

அந்த யாகத்தில் தபஸ் யஜமானராக இருந்தார். யஜமானர் ஸங்கல்பம் செய்துக் கொண்டு யாகம் செய்பவர். மந்திரங்கள் தானே ப்ரம்மா எனும் ஸ்தானத்தில் இருந்தார். ப்ரம்மா யக்ஞ கார்யங்கள் சரிவர நடப்பதற்கு காரணமானவர்.

ஸத்யத்தின் அபிமான தேவதை ஹோதா எனும் ரித்விக்காக இருந்தது. தேவர்களால் உண்ணப்படும் அம்ருதம் உத்காதா என்பவரின் கடமையைச் செய்தது. கடந்த காலத்தின் அபிமானி தேவதை ப்ரஸ்தோதா என்பவராகக் கடமையைச் செய்தது. எதிர்காலத்தின் அபிமானி தேவதை ப்ரதிஹர்த்தா எனும் ரித்விக்காக ஸாம கானம் செய்யும் செயலைச் செய்தது. இந்த ஸத்ரம் எனும் யாகத்தை முழுவதும் அநுஷ்டிக்க விரும்பும் தேவதைகளுக்குப் ப்ராண வாயு அத்வர்யு எனும் ரித்விக்காக இருந்தது. ப்ரயோகத்தை நன்கு அறிந்த அபானன் 'ப்ரதிப்ரஸ்தாதா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எனும் ரித்விக்காக இருந்தது. ருது ஸம்பந்தியான தேவதைகள் உபகாதா என்னும் ரித்விக்காக இருந்தன. யக்ஞத்தில் ஸாம கானம் செய்யும் போது உடன் ஸாமம் சொல்பவர் உபகாதா. ருது தேவதைகள் ஸதஸ்யர் என்னும் பதவியில் இருந்தன. ஸதஸ்யர் எனும் அறிஞர்கள் வேள்வி சரியாக நடக்கிறதா எனக் கவனிப்பவர்கள். பக்ஷங்களும், மாதங்களும், சமஸாத்வர்யுக்கள் என்ற ருத்விக்குகளாக ஆயின. பிரம்ம ஸம்பந்தமான சாஸ்திரங்களை விச்வஸ்ருஷ்டிக்களின் தேஜஸ் ப்ராம்மணாச்சம்ஸின் எனும் ரித்விக் ஸ்தானத்தை அலங்கரித்து கூறியது. விச்வஸ்ருஜ் யாகத்தை அறிந்தவரின் புகழ் அச்சாவாகர் எனும் ரித்விக்காக ஆயின.

அவர்களின் நேர்மையான எண்ணம் ப்ரசாஸ்தா எனும் ரித்விக்காக ஆனது. அவர்களின் ஸம்பந்தமான ஜலரூபம் யக்ஞத்தில் ஸோம ராஜா எனும் பாத்திரத்தை தாங்கும் பீடமாக ஆயிற்று. அவர்களுடைய பலம் த்ருவம் என்னும் யக்ஞ ஸாதனத்தைக் (பாத்ரத்தை) காப்பாற்றும் த்ருவ கோபனாக ஆயிற்று. அவர்களின் ஸம்பந்தமான, காரியங்களைச் சாதிப்பதில் சாமர்த்யம் க்ராவஸ்துத் என்ற ருத்விக் ஆகி, ஸோமரஸம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிழியும் கல்லே ஸ்தோத்திரம் சொல்பவராக ஆயிற்று.

தேவர்களின் பூஜாபலனானது போத்ரீ என்னும் ஹோம மந்திரங்களைக் கூறும் போதா எனும் ரித்விக்காக ஆனது. தேவர்களின் ப்ரகாசம் நேஷ்டா எனும் ஹோம மந்த்ரங்களைக் கூறும் நேஷ்டாவாக ஆயின. அவர்களின் ச்ரத்தையானது ஆக்நீத்ரர் எனும் ரித்விக்காக ஆயின. இரா எனும் அன்ன தேவதை பத்நியாக ஆயிற்று. (இங்கு சாயனர் அன்ன தேவதை என அர்த்தம் செய்கிறார். இரா என்பதற்கு பூமி, ஸரஸ்வதி என்றும் அர்த்தம் உள்ளது) தேவர்களின் ஸங்கல்பம் நிச்சயபுத்தி (ஆகூதி எனும் தேவதை) புரோடாசம் இடிக்கும் காரியம் செய்தது. தேவர்களின் பசி தாகம், இரண்டும் உக்ர ரூபமாக இருந்துகொண்டு இத்மங்களைக்கொண்டு வந்தன. அவர்களின் வாக்கானது, காய்த்ரீ முதலான சந்தஸ்களின் விசேஷங்களை அறிந்து சுப்ரமண்ய தேவதையாக ஆயிற்று. அந்த வாக் தேவதை கல்பஸூத்ரங்களையும் அறிந்து அக்னிஷ்டோமாதி யாகங்களையும் விஸ்தாரப் படுத்துவதாக இருந்தது.

அக்னிஷ்டோமாதிகள்—

ஸம்ஸ்தைகள்—ஏகவிம்சதி ஸம்ஸ்தா: என்று கூறப்படுகின்றன, ஸப்தஸோம ஸம்ஸ்தைகள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸப்த ஹவிர்யக்ஞ ஸம்ஸ்தைகள், ஸப்த பர்க யக்ஞ ஸம்ஸ்தைகள் ஆக 21.

ஸப்த ஹவிர்யக்ஞ ஸம்ஸ்தைகள் 1. ஆதானம், 2. அக்னிஹோத்ரம், 3. தர்சபூர்ணமாஸம், 4. ஆக்ரயணம், 5. சாதுர் மாஸ்யம், 6. நிருடபசு பந்தம், 7. ஸௌத்ராமணி. ஸப்த பாகயக்ஞ ஸம்ஸ்தைகள் - 1. அஷ்டகை 2. பார்வணம் (மாசி ச்ராத்தம்) 3. ஸ்தாலீ பாகம், 4. ச்ராவண மாதத்தில் ஸர்ப பலி 5. ஆக்ரஹாயன மாதத்தில் செய்யும் ஸர்பபலி உத்ஸர்கம் 6. சைத்ர மாதத்தில் செய்யும் ஈசானபலி 7. ஆச்வயுஜ மாதத்தில் செய்யும் ஆக்ராயணம்.

ஸப்த ஸோம ஸம்ஸ்தைகள். 1. அக்னிஷ்டோமம், 2. அத்யக்னிஷ்டோமம். 3. உக்த்யம். 4. ஷோடசீ, 5. வாஜபேயம், 6. அதிராத்ரம், 7, அப்தோர்யாமம், என்பன.

இரவு பகல்கள் யக்ஞ பசுக்களின் பாலகர்களாகவும், முகூர்த்தங்கள் எனும் காலவிசேஷம் (1 முகூர்த்தம் - 2 நாழிகை, 48 நிமிடங்கள்) யக்ஞ ஸம்பந்தமான எல்லாக் காரியங்களைச் செய்வதற்கு அனுப்பப்படும் ப்ரேஷ்யர் என்பவ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரர்கவும், ம்ருத்யு தேவதை, யக்ஞ பசுக்களை சப்த மில்லாமல் இருக்கச் செய்யும் சமிதா என்பவராக வும் ஆயினர்.

இதற்கு முன்பு சொல்லப்பட்ட மந்த்ரங் களால் பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் செய் யும் ஸத்ரம் எனும் யாகம் கூறப்பட்டது.

பின்பு ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் (ஆயிரமாண்டு கள்) என்னும் ஸத்ரத்தை மந்த்ரங்கள் கூறு கின்றன.

இந்த யக்ஞம் செய்யும்பொழுது இச்சாசத் சக்தி, ஞான சக்தி ஸ்வரூபமான, ஸ்வர்ணம் போன்ற காந்தியையுடைய சகுனி என்னும் பக்ஷி உண்டாயிற்று. உலகம் முழுவதையும் காக்கும் ஸ்வர்ணமயமான அதன் பெயர் ப்ரம்மா. பரப் பிரம்மமே தேவர்களின் அநுஷ்டானத்தைக் காப்பாற்றுவதற்காக ஸ்வர்ணமயமான சகுனி உருவத்தை அடைந்தார். அவரை ஹிரண்ய கர்ப்பர் எனக் கூறுகின்றனர்.

பரப்பிரம்மத்தின் தேஜஸால் ப்ரகாசிக்கும் சூரியன் உலகிற்கு ஒளி தருகிறது. தகப்டனுர்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிதா பிள்ளை என்ற நடைமுறைகள் பரப்பிரம்மத்தால் ஏற்படுகிறது. [வேதமறியாதவன் இறக்கும்பொழுது பரப்ரஹ்மத்தை அறியமாட்டான்.] பரப்பிரம்மத்தின் ஸ்வரூபமறிந்தவன் அதிகமான புண்ய விசேஷங்களால் மேல் ஜன்மாவையும், அதிகமான பாபத்தினல் கீழ்த்தரமான ஜன்மாவையும் அடைவதில்லை. பாப புண்ய பலன்கள் அவனிடம் ஸம்பந்தமடைவதில்லை. ஜன்மமில்லாதவனக ஆகிருன். பிறகு सहस्रसंवत्सरं என்ற யாக ஸ்வரூபம் விளக்கப்படுகிறது.

(கலியுகத்தில் ஸத்ர யாகம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது) 250 வருஷங்கள் तृवृत्स्तोम என்னும் ஸாமகானத்துடனும் பிறகு 250 வருடங்கள் பஞ்சதச ஸ்தோமம் என்ற ஸாம கானத்துடன் ஸோம யாகம் செய்யப்படவேண்டும். பின் 250 வருஷங்கள் ஸப்ததச ஸ்தோமம் என்ற ஸாம கானத்துடன் ஸோம யாகம் செய்யப்படவேண்டும். இது 3-மூன்ருவது 250 வருஷங்கள் அம்சம். பின்பு 250 வருஷங்கள் ஏகவிம்சஸ்தோமம் என்ற ஸாமகானத்துடன் ஸோம யாகம் செய்ய வேண்டும். இது நான்காவது அம்சம். இந்த நான்கு அம்சங்களும் கூடி தேவர்களின் ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் எனும் ஸத்ரம் ஆகின்றது. (தகப்பனுர்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ந்ளை என்ற முறையில் பல தலைமுறைகள் யாகம் செய்வது ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் என்று ஒரு வகை சொல்லப்படுகிறது.)

முன் காலத்தில் விச்வஸ்ருஜ் யாகத்தை அறிந்த தேவர்கள் இந்த ஸஹஸ்ரஸம்வத்ஸரம் என்ற யக்ஞத்தால் உலகத்தை ச்ருஷ்டி செய்தனர். சத்ய ஸங்கல்பர்களான தேவர்களால் ச்ருஷ்டி செய்யப் பட்டதால் விச்வஸ்ருஜ் என்று கூறப்படுகிறது. உலகை ச்ருஷ்டி செய்யத் தகுதியான இந்த ஸத்ரத்தைச் செய்வதனுல் ஹிண்யகர்ப்ப ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை அடைகின்றனர். ப்ரம்ம லோகத் தில் ப்ரம்மாவின் ஸமீபமாக இருக்கும் நிலையை அடைகின்றனர். சூரியாதி தேவர்களின் ஸாயுஜ் யத்தையோ அவர்களுக்கு சமமான ஐச்வர்யம் போகங்களை அடைகின்றனர்; அவர்களும் ஸம மான (தேவர்களுக்கு) லோகத்தை அடை கின்றனர். எவர்கள் இந்த ஸத்ரத்தின் விதி களின் யக்ஞத்தை அனுஷ்டிக்கிறுர்களோ, எவர் கள் சிஷ்யனுக்கு சொல்கிறுர்களோ, எவர்களுக்கு செயல்முறையைச் சொல்கிறுர்களோ அவர்கள் அனைவரும் ப்ரம்ம ஸாயுஜ்யம் அடைகின்றனர்.

(ஓம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குறிப்பு:—

இங்கு ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் என்பது ஆயிரம் மாதங்கள் செய்ய வேண்டுவது, 12 ராத்ரிகள், ஒரு ஸம்வத்ஸரம் என்ற வேத வாக்யத்திஞல் 12000 ராத்ரிகள் 33 வருஷங்கள் 4 மாதங்கள், 1000 தினங்கள் செய்வது என்று மூன்று விதமாக அர்த்தம் செய்யப்பட்டுள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi